# சிரித்திரன்




CHIRITHIRAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியக் கண்காட்சி பார்க்க வந்த பெண்கள் அப்படி என்ன மெய் மறந்து ரசிக்கிறார்கள்!

அதுவா...... அந்தப் பெண் அணிந்திருக்கும் சீமா சாரியை.



புத்தாடை அணியும் புதுவருடம் வருகிறது.

புது வருடப் பொலிவுடன் விளங்க

சிந்தெட்டிக் சீமா சாரியை வாங்கி அணியுங்கள்.

# சீமா சில்க் இன்டஸ்றீஸ் லிமிட்.,

| | |
|---|---|
| திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
| தந்தி: சீமாசில்க், | தொலைபேசி: 7170 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனிச் சிரிப்பு

### சீ.........நீ!

நாங்களெல்லாம் ரொம்பக் கஷ்டப்படுகிறோம். தேநீர் குடிக்கப்போனால் இனிப்பில்லாமல் எப்படிக் குடிப்பதாம்......? அல்வா, லட்டு இப்படி இனிப்பாக ஆசைக்கு ஏதாவது செய்து சாப்பிடுவோம் என்றால் அதற்கும் அகப்பட மாட்டாயாம்...... என்ன ஆளப்பா...சீ...நீ!

★

### சீனிவாசன் திருப்பள்ளி எழுச்சி

''அவர் ஐந்து நாளாகப் படுத்த படுக்கை - அவர் எழும்பின பாடாக் காணோம்.''

''ஏன்? அவருக்கு சுகமில்லையா?''

''இல்லை... 'பெட்காபி' இல்லாமல் அவர் எழும்ப மாட்டார். நான் சீனிக்கு எங்கே போவது?!

★

### இலங்கை இனிக்கவில்லை!

முதல் எறும்பு:- நான் இனி கானாவுக்கோ நைஜீரியாவுக்கோ, கனடாவுக்கோ போகப் போகிறேன்...

இரண்டாவது எறும்பு:- ஏன்... என்ன சங்கதி...?

முதல் எறுப்பு:- சீனி இல்லாமல் இங்கே சீவன்போகவா?

★

### சீனி மா

மிட்டாய் வியாபாரியின் மனைவியைப் பார்த்து பக்கத்து வீட்டுக்காரி கேட்டாள்.-

'மெய்யே...... இப்போ நீ சினிமாவுக்குப் போவதாய்க் காணோமே ஏன்?'

அதற்கு மிட்டாய் வியாபாரியின் மனைவி பதில் சொன்னாள்:-

''எப்படிப் போவது: அவருடைய வியாபாரத்துக்கு சீனி கிடைத்தால் தானே?

★

### இயற்கை வைத்தியம்

டாக்டர்:- எப்படி? நான் சொன்ன மருந்துக்கு உன்னுடைய 'சீனி' வியாதி இப்போது சுகமா?

நோயாளி:- உங்க மருந்து சுகப்படுத்தவில்லை டாக்டர்....... சீனித் தட்டுப்பாடு சுகப்படுத்தி விட்டது!

★

### எனக்காக மோர் குடியுங்கள்!

''நண்பர்களே! உங்களையெல்லாம் நான் தேநீர் விருந்துக்கு அழைத்து நீங்கள் இங்கே நூற்றுக்கும் அதிகமானோர் வந்திருக்கிறீர்கள்....... நான் உங்களை அழைத்தது மெய்.........ஆனால் ஆனால்.........ஆனால்.........''

★

### ஏலேலோ! ஏலேலோ!

கூட்டத்தில் ஒருவர்:- ச்சா! அவ ... என்ன அழகாக இருக்கிறது. வாயில் சீனி அள்ளிப் போட வேண்டும்.

மற்றவர்:- பொறுங் காணும், கப்பல் வரட்டும்.

★

ஆயுள்வேத வைத்தியர்; நான் சொல்லுற மாதிரி பத்தியம் காக்க வேணும், இனிப்பு உறைப்பு ஒன்றும் சாப்பிடக் கூடாது.

நோயாளி: நாங்க இப்போ சில நாட்களாகப் பத்தியம் தான் இருக்கிறம் வைத்தியர். தூளும் சீனியும் கிடைக்குதில்லை.




Mrs டா: டார்லிங்

Mr டா: யேஸ் டார்லிங்

Mrs டா: அப்போ நீங்க மண்ணுங்கட்டியா கடித்து டீயோடு குடித்தது.

Mr டா: மை கோட் அது மண்ணுங் கட்டியல்ல, பனங் கட்டி...... ஸ்வீற் ரொடியில் ஷறிப் பண்ணின ஸ்வீற் கட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தணிகாசலம் படைத்தார்!

அன்று வடமாநிலக் கல்வி அதிபதி வகுப்புக்களைப் பார்வையிடுவதாக அறிவித்திருந்தார். மூன்று நாட்களுக்கு முன்பே அறிவிப்புக்கிடைத்தமையால் எங்கள் ஆங்கில வகுப்பாசிரியர் பல கேள்விகளையெடுத்து ஒவ்வொரு மாணவருக்கொவ்வொன்ருக மனப்பாடம் செய்வித்தார். முன் வாங்கிலிருந்த இரவிக்கு வந்த கேள்வி, ''கூ கிறிஏற்றட் யு?'' அதாவது ,யார் உன்னைப் படைத்தவர்?. அதற்குரிய விடையை ஆசிரியர் சொல்லிக் கொடுத்தார். இரண்டாவதாக இருந்த இராசுவிற்குடைய கேள்வி ''கூ இஸ் தெ டிரெக்டர் ஒவ் எடியுகேஷன் வோ நொதேன் றிஜன்'' அதாவது உன் வடமாநிலக் கல்வி யதிபர்யார்?'' அதற்குரிய விடையையும் ஆசிரியர் சொல்லிக் கொடுத்தார். இவ்வாருக ஒவ்வொருவருக் கொவ்வொன்ருகக் கேள்வியும் பதிலும் சொல்லிக் கொடுக்கப்பட்டது. அறிவித்தலின் படி கல்வி அதிபதியும் ஒரு இன்ஸ்பெக்டரும் வகுப்பிற்கு வந்தனர். இன்ஸ்பெக்டர் கேள்வி கேட்பதற்காக தன்டயரியைத் தேடிக் கொண்டிருக்கும் போதே ஆசிரியர் தான் நல்ல கேள்விகளை எடுத்திருப்பதாகவும் அதைக் கேட்கும் படியும் கூறி ஆளை ஒருவாறு இரவியின் வாங்கடியிற் சேர்த்தார். மீண்டும் டயரி தேவைப்பட்டதால் இரவியைத் தன் காரிலிருந்து டயரியை எடுத்து வரும்படி கூறிவிட்டுக் கேள்வி கேட்க ஆரம்பித்தார். இன்ஸ்பெக்டர்- ''கூ கிறிஏற்றட் யூ?'' இராசு- ''மிஸ்ரர் தணிகாசலம் கிறிஏற்றட் மீ!'' இன்ஸ்பெக்டர் திகைப்படைந்தார். இவன் தன் தகப்பனுரைக் கூறுகிருனேவெனச் சந்தேகத்தோடு ''கூ இஸ் மிஸ்ரர் தணிகாசலம்?'' என்ருர் உடனே இராசு ''மிஸ்ரர் தணிகாசலம் இஸ் அவ டிரெக்டர் ஒவ் எடியுகேஷன்'' என்ருன். இன்ஸ்பெக்டருக்கு அடக்க முடியாச் சிரிப்பு வந்தது. ஆசிரியர் திரு திருவென விழித்தார்.

ந. சிவயோகநாதன், மீசாலை.

★

## படிப்பிக்கவோ வந்தாய்

தமிழ் ஆசிரியரில் எமக்கு விருப்பமில்லை. ஆனல் தமிழ்ப்பாடம் என்ருலே எம் வகுப்பு மாணவர்கள் ஆர்வத்துடன் நிற்பர். அன்றும் ஆவலுடன் ஆசிரியரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆசிரியர் வந்ததும் எழுந்து நின்று மரியாதையாக வணக்கம் செலுத்திவிட்டு அமர்ந்தோம். திடீரென்று ஆசிரியர் நேற்றுப் படிப்பித்ததில் கேள்வி கேட்கப் போகின்றேன் என்ருர். எல்லாருக்கும் திகில்.

''சரி நேற்று இடைச் சொல்லைப் பற்றிப் படித்தோமல்லவா'' என்று கேட்டார். நாமும் ஆம் என்ருேம். உடனே அவர் ஒரு பையனை எழுப்பி ஓகார இடைச் சொல்லுக்கு உதாரணம் கூறும் படி சொன்னுர். எழுந்து நின்ற பையனே விடை தெரியாமல் விழித்தான். ஆசிரியருக்குக் கோபம் வந்து விட்டது. ''இங்கு படிக்கவோ வந்தாய்'' என்று கேட்டு விட்டு நின்ருர். உடனே அப்பையனின் பார்வைக்குப் பயந்தோ என்னவோ. ''படிக்க''வோ'' என்றதில் ''ஓ''கார இடைச் சொல் இருக்கிறது அல்லவா என்ருர்.

உடனே பையன் ''படிப்பிக்கவோ வந்தாய்'' என்று கேட்டு விட்டு இதிலும் ஓகார இடைச் சொல் ''இருக்கிறது தானே சேர் என்ருன். அவரும் அசடுவழிய ''ஓம்'' என்ருர்.

ஆசிரியர் எந்தக் கேள்விக்கு ஓம் என்ருரோ தெரியவில்லை.

முருங்கன் - மகேஸ்வரன்

★

## மறதி வாழ்க!

ஒரு சிறிய வீட்டில் ஒரு குடும்பம் வசித்து வந்தது. அவர்கள் வளர்த்து வந்த பூனை ஒரு நாள் இறந்து விட்டது. அதன் உடலைப் புதைக்க அவர்கள் வீட்டில் இடமில்லை. ஆகவே மனைவி பூனையின் உடலை ஒரு கடதாசியில் சுற்றி கணவன் வேலைக்கு ரயிலில் போகும் பொழுது வழியில் வீசி விடும்படி கொடுத்தாள். ரயிலில் சிநேகிதர்களுடன் பேசிக்கொண்டு சென்றதால் பார்சலை வீச மறந்து விட்டார். ஆபீஸ் முடிந்ததும் மாலை போகும் பொழுது வீசி விட வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்தார். மாலையிலும் நண்பர்களுடன் பேச்சுப் பராக்கில் பாசலை வீச மறந்து வீட்டிற்கு எடுத்துச் சென்ருர். மனைவி பார்சலைப் பார்த்ததும் கோபங் கொண்டு ஏசினுள். மறுநாள் கட்டாயம் போகும் பொழுது வீசி விடுவதாக சமாதானம் கூறினுர். மறுநாளும் முதல் நாளையை போலவே வீச மறந்து வீட்டிற்கே பாசலை கொண்டு வந்தார். அதைப் பார்த்ததும் மனைவி கோபங்கொண்டு பாசலை பறித்து நிலத்தில் வீசினுள். அவள் வீசிய வேகத்தில் பாசல் குலைந்தது. என்ன ஆச்சரியம் பூனையின் உடலுக்குப் பதில் பொரித்த கோழி பாசலில் இருந்தது. ரயிலில் யாரோ அவரின் கோழிப் பாசலை வைத்து விட்டு மாறி இவரின் பூனைப் பாசலை எடுத்துச் சென்று விட்டனர். மனைவிக்கு ஒரே ஆனந்தம்.

வாழ்க அவர் மறதி.

★

பெண் எலி: எங்க எதிர் காலத்தை நினைக்க ரொம்பக் கவலையாக இருக்கு.

ஆண் எலி: ஏன்!...

பெண் எலி: மனித குலம் ஆடையை வரவரக் குறைந்துக் கொண்டு போகுது...... எங்களுக்கு வெட்டுறதுக்கு ஆடையில்லாமல் போய் விடும் போல.

—ஜோக்கிரடீஸ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தும் அப்படி மாறி இருக்கிறாரோ என்று பார்க்க கருடன் ஆசைப் பட்டது. ஆனால் அவரை அந்தக் கோலத்தில் இம்முறை எங்கும் காண முடியவில்லை.

## இளவரசி மார்கரட்!

ஸ்னோடன் பிரபுவுக்கும் மார்கரட் இளவரசிக்கும் மணமுறிவு வரப்போகிறதென்று யார்சொன்னது?

மூன்று வாரங்களுக்கு முன் பார்படோஸ் விமான நிலையத்தில் இருவரும் அன்புடன் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிய காட்சியை 'கருடன்' ஒரு புகைப் படத்தில் கண்டது.

பார்படோஸ் கடற்கரையில் கொஞ்சக் காலத்தை உல்லாசமாகக் கழிக்க என்று இளவரசியின் கணவர் வந்திருந்தார். அவர் வந்து இரு வாரங்களால் மார்கரட்டும் 'டூரிஸ்ட் கிளாஸில்' பறந்து வந்து தன் கணவரோடு சேர்ந்து கொண்டரர்.

மனைவியை வரவேற்க எப்னோடன் விமான நிலையம் சென்றிருந்தார். இருவரும் அரவணைத்து முத்தமிட்ட போது மார்கரட்டின் முத்தம் எவ்வித சோகச் சாய்வும் இருக்கவில்லை. விழிகள் உணர்ச்சிவசத்தால் மூடியிருந்தன என்று 'நியூஸ் வீக்' என்ற அமெரிக்க வாராந்திரி கூறுகிறது.

பார்படோலில் ஸ்னோடனிக் மாமனார் ஒலிவர் மாஸெல் வசித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் ஒரு டிசைனர்.

## குளிக்கும் அறையில் கென்னடி!

காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடியை நிர்வாண கோலத்தில் யாராவது பார்த்திருக்கிறார்களா?

ஆம்! கென்னடியின் தந்தையை 'வெள்ளை மாளிகை'யில் பராமரித்து வந்த ஒரு தாதி பார்த்தார். பார்த்து மயங்கி விழப் பார்த்தார்.

ஒரு நாள் 'ஜனாதிபதி' உன்னைக் காண விரும்புகிறார்' என்று வேலையாள் ஒருவர் இந்தத் தாதியிடம் வந்து கூறினார்.

இப் பெண் ஜனாதிபதியின் அறைக்குள்ளே சென்றபோது அவரைக் காணவில்லை.

வேலையாளை விசாரித்த போது 'அவர் குளியல் அறையில் இருக்கிறார். நேரே உள்ளே போ' என்றார்.

தாதி குளியல் அறைக்குள்ளே போய்—மூர்ச்சை அடையாத குறையாக அதிர்ந்து போய் நின்றுவிட்டார்.

குளியல் அறையில் நீர் நிரப்பிய தொட்டிக்குள் நிர்வாண கோலத்தில் ஆனந்தமாக அமர்ந்து 'ஸோப்' போட்டுக் கொண்டே கென்னடி தாதியிடம் தன் தகப்பனாரின் உடல் நிலையை விசாரித்தாராம்!

'அவர் என்ன கேட்டார். நான் என்ன பதில் சொன்னேன்' என்பது அப்போது எனக்குத் தெரியாது. அவ்வளவு தூரம் அதிர்ச்சி அடைந்திருந்தேன்' என்று அந்தத் தாதி எழுதியுள்ள ஒரு புத்தகத்தில் கூறியுள்ளார்,

## மாத்திரைக் கதை

### கடவுள்

வெய்யிலில் அங்கிங்கெல்லாம் புல் மேய்ந்து களைத்துப்போன மாடு இறுதியாகப் பரந்து வளர்ந்திருந்த ஆலமரத்தின் நிழலில் வந்து படுத்து இளைப் பாறிக் கொண்டிருந்தது.

தூரத்தில் உச்சி வான் வரை வளர்ந்து யாருக்கும் கொஞ்ச நிழல் கூடத் தராமல் நின்ற சுயநல மரங்களையும் ஆலமரத்தையும் மாறி மாறி ஒப்பிட்டுப் பார்த்து தத்துவத்தில் தோய்ந்தது மாடு.

நீண்ட ஆலமரத்தின் கிளைகளைத் தாங்கி நிற்கும் உறுதியான விழுதுகளைப் பார்த்து ஏதோ அறிந்து விட்ட ஞானத்தில் அது பெருமூச் செறிந்தது.

''இறைவன் எவ்வளவு பெரியவன்'' என்று தனக்குத் தானே ஒரு முறை கூறிக் கொண்ட அந்த ஞானி மாடு மேலும் உச்சரித்தது:- ''நிழலைக் கொடுக்கிற மரத்துக்கு விழுதைக் கொடுக்கிற கடவுள்''

—காசி ஆனந்தன்.



பிக்பொக்கட்: என்னண்ணைச்சி முந்தியெல்லாம் ஐநூறு, அறுநூறு கடன் கேட்டா உடனே தருவியே... இப்ப ஐம்பது சதம் கடன் கேட்க இல்லையெண்ணிறியே!?

மற்றவர்: இப்ப நீ மிதிபலகைப் பிரயாணம் செய்ய முடியாதே.

சாயிரா.

ரசிகன்: என்ன கலைஞன் கவலையாக இருக்கிறீங்க.

கலைஞன்: இந்நாட்டு மக்களுக்கு கலாரசனையே கிடையாது எனக்கு ஒரு பொன்னாடை போர்த்துறாங்களில்லையே.

—ஜோக்கிரடீஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மாணவிகள் களை பிடுங்கிய கதை

குளிர்ச்சிக் கண்ணுடி கண்களை மறைக்க, பட்டுக்குட்டை கழுத்தை வருட, சுங்கான் 'பைப்' உதட்டில் ஆட, கட்டைக் காற் சட்டையும், 'பாட்டிக்' சாரமும், நீலச் சாறியும் உடுத்திய பல வகை உருவங்கள் தள்ளுவண்டியில் மண் இழுத்தன; மண்வெட்டியால் நிலம் கொத்தின; கொளுத்தும் வெயிலில் காய்ந்தன.

பௌத்தலோக மாவத்தை மீதாகப் பறந்துகொண்டிருந்த 'கருடன்' 'இது என்ன? கட்டட வேலைக்குப் புதுவகையான தட்டார் வந்திருக்கிருர்களே' என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டு சற்றுக் கீழே இறங்கிப் பறந்து பார்வையை ஓட்டியது—

'ஏயர் கண்டிஷன்' ஆபீஸ்பைல் மேஜைக்கு மேல் கால் போட்டுக்கொண்டு காரியதரிசிக்கு ஏவல்கள் விடுக்கவேண்டிய மந்திரி பிரதானிகள், நிரந்தரக் காரியதரிசிகள், எம். பீ. க்கள் எல்லோரும் பண்டாரநாயகா நினைவு மண்டபம் கட்ட மாடாய் உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

பிரதமர் 'நாமெல்லாம் கிராமப் பெண்கள்' என்று கூறிக் கொண்டு தள்ளுவண்டி இழுத்த காட்சி கண்கொள்ளாக் காட்சி! மந்திரி செனமன் 'ஒமை டார்லிங், கிளமன்டைன்' என்று பாடியபோது...ஆஹா காதல் தேன் பாய்ந்தது.

'என்ன முன்மாதிரி, என்ன முன்மாதிரி, மந்திரிமாரென்ருல் இப்படியல்லோ இருக்க வேண்டும்' என்று என் மனதுக்குள் மெச்சிக்கொண்டு அருகில் வந்து ஒரு மரக்கிளையில் அமர்ந்தேன்.

மந்திரிமாரும், பெரும் உத்தியோகத்தரும் உண்மையாகவே வியர்வை சிந்த உழைப்பதைப் பார்த்துக் கொண்டு நின்ற இரண்டு வாலிபர்கள் பேசியது என் காதில் பட்டது:

'அரையில் துண்டும், தலையில் தலைப்பாகையும் கட்டிய தொழிலாளர்கள் செய்யிற வேலையை அரையில் 'பாட்டிக்'கும் தலையில் கருத்துறைத் தொப்பியும் அணிந்த கனவான்கள் செய்வதைப் பார்க்க உண்மையில் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. ஆனல் டட்லி சேனநாயகா காலத்தில் பள்ளிக்கூடப் பெண் பிள்ளைகள் களை பிடுங்கிய கதையாக இந்தக் கட்டடம் கட்டும் வேலையும் முடிந்துவிடக் கூடாது' என்ருர் ஒரு வாலிபர்.

'அது என்ன களை பிடுங்கிய கதை?' என்ருர் இரண்டாவது வாலிபர்.

'இது தெரியாதா? பள்ளி மாணவிகள் வயலுக்குப் போய்ப் பிடுங்கியதெல்லாம் களை அல்ல. களை என்று நினைத்து நெற் பயிர் களைத்தான் பிடுங்கிப் பிடுங்கிக் குவித்தார்கள் என்று பின்னர் கண்டுபிடிக்கப்பட்டதாம். அது போல கனவான் வேலை பார்ப்பவர்கள் கட்டடம் கட்ட வந்து சிமெந்து குழைக்கிறேம் என்று மண்ணைக் கூடப் போட்டுக் குழைத்துவிட்டால்...' என்ருர் முதலாமவர்.

## எங்கே தஹா?

கடந்த சில நாட்களாக 'கருடன்' டாக்டர் தஹநாயக்கா எம். பி.யைத் தேடித்திரிந்து,

ஹிஹூம்...ஆளைக் காணக் கிடைக்கவில்லை.

ஜவுளிக் கூப்பனுக்கு கடைகளில் கொடுக்கப்படும் சீத்தை முதலிய துணிகள் இனிமேல் மாதத்திற்கு 4 யார்தான் வழங்கப்படும் என்று கேள்விப்பட்டவுடன் 'தஹா'வையன்றி வேறு யாரை நினைப்பது?

ஜவுளிப் பஞ்சம் வரும் போதெல்லாம் கோவணாண்டியாக மாறும் 'தஹா' இப்போ

---


ஆனை கட்டிப் போர் அடித்தது அந்தக் காலம்...பேனை ஒட்டிப் ''போர்'' அடிப்பது இந்தக் காலம்.

—ஓர் சலித்துப்போன வாசகன்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**செல்வி. புஷ்பராணி நடேசன், 23, புராண விகார மாவத்த, கொழும்பு-6.**

கே: உயர்ந்தவன் தாழ்வதற்கும் தாழ்ந்தவன் உயர்வதற்கும் உரிய காரணத்தை கூறுங்கள்?

ப; ஆளும் கட்சி அங்கத்தவரென்றால் உயர்வு, இல்லாவிடில் தாழ்வு.

ஃ

**செல்வி: சி. சசிகலாதேவி, இல. 1, பன்சல வீதி, கோட்டைமுனை, மட்டுநகர்.**

கே: சிறந்த அரசியல் தலைவர்கள் யாவரும் இருதய நோயாலும், புற்று நோயாலும் பீடிக்கப்பட்டு இறக்கிறார்களே இதன் காரணம் யாது?

ப: அவர்கள் மெழுகுதிரிபோன்றவர்கள். தன்னை ஒழித்து ஒளி கொடுப்பவர்கள்.

ஃ

**செல்வி: ஜெ. மஞ்சுளா, 276, கண்டி வீதி, தெலியாக்கோன்னை, குருநாகல்.**

கே; உயிரைக்காத்த உத்தமனா மானத்தை காத்த மன்மதனா, வாழ்க்கைத்துணைக்குசிறந்தவன்?

ப: மரணத்தில் இருந்து காப்பாற்றியதற்காக மருத்துவரை ஒருவரும் மணமகனாக ஏற்றுக் கொள்வதில்லையே.

ஃ

**எம். பி. சிராஜ்டீன், 105, கடற்கரை வீதி, காத்தான்குடி-6.**

கே: பிறக்கும் மனிதன் ஏன் இறக்க வேண்டும்?

ப: மேலும் பாவம் செய்யாமல் போவதற்காக.

ஃ

**அ. அரசரெத்தினம், சேனையூர், மூதூர்.**

கே: மன்னிக்க முடியாத குற்றம் ஏது?

ப: முதலாம் வகுப்பு ரயில் பெட்டியில் பிரயாணம் செய்து வந்து மகாத்மா காந்தி விழாவிற்கு தலைமை தாங்குவது.

ஃ

**எம். ஐ. ஏ. லதீப், பட்டாணிச்சியூர், ''தருல்கரூர்'' மஸ்ஜித் லேன், வவுனியா.**

கே: மனித வாழ்க்கையில் தேடமுடியாத செல்வம் எது?

ப: சினிமா விரும்பா மனைவி.

ஃ

**எம். எச். எம். நஸார், மொறன் தொட்டை.**

கே: பிரமச்சாரி என்பவர் யார்?

ப: சாரிச் செலவில்லாச் செல்வப்பிள்ளை.

ஃ

**எம். எம். இஸ்மாயில், 133, நுணுவில ரோட், அக்குரணை.**

கே: இன்றைய வாலிபர்கள் தன் முகத்தை கிரீம், பவுடர், கொண்டு அலங்கரிப்பதின் நோக்கம் என்ன.?

ப: பெண்களை வலம் வரும் செயற்கைக் கிரகங்கள் தம்பி.

ஃ

**அப்துல் அஸீஸ், கிராண்ட்பாஸ், கொழும்பு-14.**

கே: அழியா திருப்பது எது? அழிந்து விடுவது எது.

ப: அழியாமல் இருப்பது பார்த்த படம், அழிவது படித்த படிப்பு.

### முதலாம் பரிசு பெறுபவர்.

**எஸ். சவரிமுத்து,** சுண்டிக்குளி.

கே: இறப்பில் நம்பிக்கையில்லாதவர்களும் பூமியில் உளரோ?

ப: உண்டு...... இடுகாட்டு வாசலில் ''சுவீப் டிக்கட்'' விற்பவனும்... வாங்குபவனும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. மு. தமீர், ஏ2/எவ்5, புளூ மண்டல் பிளட்ஸ், கொட்டாஞ் சேனை, கொழும்பு-13.

கே: மகுடியாரே இன்றைய இலங்கையில் நீர் எதை விரும்பு கிறீர்?

ப: இலங்கை மனிதரை அல்ல, மரத்தை, இந்நாட்டுச் செல்வத் துக்குக் காரணம் மரங்கள் அல்லவா.

ஃ

இரா. மணியின்தாசன், வள்ளலூர் இடைக்காடு.

கே: ''தமிழ் எழுச்சி'' விழா விற்கு தலைமை தாங்கும் எம்மில் சிலர் ''தமிழ் புறக்கணிப்பு'' விழாவிற்கும் தலைமை தாங்கு வதேன்?.

ப: தலைமை தாங்குவது தான் அவர்களின் குறிக் கோள். அது திருடர் கூட்டமாக இருந்தால் என்ன, திருத்தொண்டர் கூட்ட மாக இருந்தால் என்ன.

ஃ

ச, இரத்தினசிங்கம், 4, வெயிலி வீதி. மட்டுநகர்.

கே: சுதந்திரத்திற்கும் தந்தி ரத்துக்கு முள்ள வேறுபாடு என்ன?

ப: சுதந்திரத்தைப் பாதுகாக்க இராச தந்திரிகள் தேவை அல்லவா.

ஃ

எஸ். சிவா, கண்டி.

கே: காதலித்த காரிகையை கானகத்தே விட்டுச் சென்ற நளனுக்கும், இன்றைய காதலர் கள் பிரிந்து செல்வதற்கும் உள்ள வேற்றுமை யாதோ?

ப; நளன் ஒருவரும் காணமல் கானகத்தில் விட்டுப் பிரிந் தான்...... இன்றைய காதலன் பலர் காண ''கோர்ட்டில் விட் டுப் பிரிகிறுன்.

ஃ

த. வடிவேலு, வல்வெட்டித்துறை

கே: எமது அரசாங்கத்தின் குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கம் வெற்றி பெறுமா?

ப: சந்தேகம்... சினிமா இசை திசை திருப்புகிறதே.

ஃ

செல்வி சிவராசா தவமணி, சென். பெனடிக்ஸ் மாவத்தை, கொட்டாஞ்சேனை.

கே: மனிதனல் சந்தோஷமாக வாழ முடியுமல்லவா?

ப: சந்தோஷத்தில் தோஷ மிருக்கே.

ஃ

க. கனகசுந்தரம், வட்டுக்கோட்டை.

கே: உலகில் சுலபமானது எது? கஷ்டமானது எது?

ப: சவாரித்தம்பர் கூறிய மாதிரி ''தாய்க் கலனேயும்சேய்க் கலனேயும் பொருத்துவது சுல பம்......... இரு சாதகங்களேப் பொருத்துவது கஷ்டம்.

ஃ

நெல்லே எஸ். நடேஸ், நெல்லியடி

கே: இலங்கையில் பெண் பொலீஸ் நியமிக்கப்படப் போ வது பற்றி தங்கள் கருத்து யாது?

ப: பெண்களும் 'விசிலடிக்கப்' போகிறுர்களே!

ஃ

சூ. அல்பிறெட், குடத்தனே வடக்கு, குடத்தனே.

கே: மனிதன் தன்னே எப் போது உணருகிறுன்?

ப: அரசாங்கத்தை ஆட்சி பீடம் ஏற்றிய பின்பு.

ஃ

திருமதி முருகேசு முருகன், கோவிலடி, நெல்லியடி, கரவெட்டி.

கே: மனிதன் கடவுளுக்குச் செய்த கைமாறென்ன?

ப: தாள் நோட்டுகளே வங்கி யில் போட்டு சில்லறைக் காசை கோயில் உண்டியலில் போடுவது.

ஃ

லதீப், வவுனியா.

கே: இன்னும் சில ஆண்டுக ளில் உலக நாகரீகம் எப்படி இருக்கும்?

ப: இப்போ உடை இடையிலி ருந்து விடை பெற்று விட்டது... இன்னும் சில ஆண்டுகளில் உட லில் இருந்து விடை பெற்று விடும்.

ஃ

எம். சிவபாலன், காரைநகர்.

கே: அன்றைய நளனின் சமை யலுக்கும் இன்றை பெண்களின் சமையலுக்கும் உள்ள வித்தியா சம் என்ன?

ப: நளன் நெருப்பில்லாமல் சமைத்தான்... இன்றைய பெண் கள் மண்ணெண்ணெயில்லாமல் நெருப்பு மூட்ட மாட்டார்களே!

ஃ

பி. யோகானந்தன், பொன்னுதுறை, உடுப்பிட்டி.

கே: கடவுள் ஏன் கல்லானுர்?

ப: பொன்னுனல் உருக்கிப் போடுவினம் தம்பி......

**மகுடி,**

மே/பா. ''சிரித்திரன்''

101/4, சென். பெனடிக்ஸ் வீதி

கொட்டாஞ்சேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி அமர்ந்தேன்

—கே. கணேஷ்

அப்பனைத் தேடிய போதவனும்
ஆடல கத்திற் கோடி விட்டான்
சுப்பனை யாவது காணவெனில்
சூரனைப் பொருத நாடி விட்டான்

அண்ணனை வாவென விளித்திடிலோ
அரச மரத்தடி போயமர்ந்தான்
கண்ணனைக் கூவி யழைத்ததுமே
கையிற் குழலினைக் கொண்டொளிந்தான்

ஆரையுந் தேடி ஆகவில்லை
அற்றுவிட் டேனுள் ளூற்றவுடன்
பேரமுதப் பேரின் பமதை
பெற்றுவிட் டேநாற்றவுடன்


இன்ஸுரன்ஸ் ஏஜன்ட்: சார் நீங்க ஒரு இன்ஸுரன்ஸ் பொலிஸி எடுத்தாலென்ன?

மற்றவர்: நான் இறந்தால் நாலு பேர் கவலைப்பட வேணும் சார். இன்ஸுரன்ஸ் பொலிஸி இருந்தால் கவலைப்பட மாட்டார்களே!

—ஜோக்ரடீஸ்.

ஒருவர்: ஏன் எங்க தமிழ் மக்கள் நல்ல மழைப் பிரதேசங்களிருக்க வெய்யில் பிரதேசங்களாகப் பார்த்துக் குடியேறினார்கள்......

மற்றவர்: தோய்த்து விரிக்கும் வேஷ்டி சீக்கிரம் காய்ந்து விடுமென்பதால் போலும்.

காதலன்– உங்கப்பா பொல்லாதவராச்சே எப்படி வந்து பெண் கேட்பது.........

காதலி– எங்கப்பா ''ராணி லயிட் சுருட்டு'' புகைக்கும் போது நல்ல ''மூட்''டில் இருப்பார். அப்போ வந்து கேளுங்க சிரித்துக் கொண்டே சம்மதம் தருவார்.

மனவேதனைகள் மறந்து மகிழ்ந்திருக்க ''ராணி லயிட் சுருட்டு'' பாவியுங்கள்.


கிடைக்கும் இடம்:-

ஈஸ்வரன்ஸ்,

நிர். 83, மெயின் வீதி,
ஹொரணை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர்.................................விலாசம்...................................

...........................

வயது...............

(மாதமொரு முறை)

இடமிருந்து வலம் ——

1. இலங்கையிலிருந்து வெளி வரும் ஹாஷ்ய தமிழ் ஏடு.

4. இதற்கும் உண்டோ அடைக் கும் தாழ்.

6. உழவரின் உயிர் நாடி.

7. அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கின் பிறந்தது இம் மூன்றெழுத்து.

9. திருமணம் ஒப்பேறுவதற்கு இதுவும் அவசியம்.

10. கடைசியாக ஆண்ட அரச னின் தமிழ் பெயர்.

13. ஒருவர் இறந்த நாளை இப்ப டியும் சொல்வர்.

15. நயினுதீவின் புராதனப் பெயர்.

17. பெண்களுக்கு இது சிறிதும் இருக்கப்படாது.

18. குளத்தை இப்படியும் சொல் வர்.

மேலிருந்து கீழ்

1. வீரகேசரி சித்திரக்காட்சியில் இடம் பெறும் சவாரித்தம் பரின் உற்ற நண்பர்.

2. யாழ்ப்பாணம் மணல் —ஆக இருந்தது யாழ்பாடி பரிசு பெற்ற பொழுது.

3. சூரியனின் மறு பெயர்.

4. உஷ்ணம்.

5. பெரியோருக்கு விருப்ப மற்றது.

6. பிள்ளையாரை இப்படியும் அழைப்பர்.

8. மணப் பெண்ணின் தாயார்.

10. சிறபங்கள் செதுக்க உதவுகி றது.

11. விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்த இக்காலத்தில் இதில் நம்பிக்கை குறைந்து வருகிறது.

12. இது உடையோரை தோற கடிப்பது கடினம்.

14. இது உள்ளவர்கள் வாழ்க் கையில் முன்னேற முடியாது,

16. தீயினல் சுட்ட புண்ணை ஆற் றலாம் இது ஏற்பட்டால் அகற்றுவது அரிது.

## போட்டி நிபந்தனைகள்

1. ஒருவர் எத்தனை கூப்பன் அனுப்ப விரும்பினுலும் நிரப்பி அனுப்பலாம். அவைகள் அனைத் தும் சிரித்திரனில் வெளிவந்த வைகளாக இருக்கவேண்டும்.

2. கூப்பன்களுக்கு கட்டணம் எதுவும் இல்லை. இலவசம்.

3. கூப்பன்கள் யாவும் குலுக் கப்பட்டு, முடிவில் தேர்ந்தெடுக் கப்பட்ட சரியான விடைக்கே முதற் பரிசு அளிக்கப்படும். இரண்டாம், மூன்றும், நான் காம் பரிசுகளும் கூப்பன்களின் கிரமப்படி அளிக்கப்படும்.

4. முதற் பரிசு பெறுபவரின் புகைப்படம் அவர் விரும்பி அனுப்பினுல், சிரித்திரனில் பிர சுரிக்கப்படும்.

5. போட்டியின் விடைகளும் பரிசு பெறுபவர்களின் பெயர் விலாசம் ஆகியன எதிர்வரும் மாத சிரித்திரனில் பிரசுரிக்கப் படும்.

6. விடைகள் அனைத்தும் தெளி வாக விளங்கும் வகையில் எழுதப் பட்டிருக்கவேண்டும்.

7. ஆசிரியரின் தீர்ப்பே சரி யானது.

8. போட்டிக் கூப்பன்கள் அனைத்தும் சாதாரணத் தபாலில் அனுப்பப்படவேண்டும். பிரதி மாதமும் 25ம் திகதி காலை 11 மணிக்கு முன் கிடைக்கக் கூடிய தாக, சிரித்திரன் பகுத்தறிவுப் போட்டி நிர். 1. மே[பா. சிரித் திரன், 101/4, சென். பெனடிக்ஸ் மாவத்த, கொட்டாஞ் சேனை, கொழும்பு-13 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

**சிரித்திரனை இலவசமாகப் பெறப் போகிறீர்கள்!**

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!**

முதற் பரிசு—சிரித்திரன் பத் திரிகை 16 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

இரண்டாம் பரிசு —சிரித்திரன் பத்திரிகை 12 மாதங்கள் அனுப்பிவைக்கப்படும்.

மூன்றுவது பரிசு — சிரித்திரன் பத்திரிகை 9 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

நான்காவது பரிசு—சிரித்திரன் பத்திரிகை 6 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

**சிந்தியுங்கள் சிரித்திரன் உங்களிடம் தேடி வருவான்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடர் நாவல்**



# மயான பூமி

—செங்கை ஆழியான்—

வைகறை இனிமையாக மலர, இருள் மெது வாக விலகத் தொடங்கியது. மென்புகார் முற்றாக நீங்கி விடவில்லை. பாலை விறகு எரித்துப்படர்ந்த புகைப் போர்வைபோல, புகார் திரை விரித்திருந்தது.

ராணி சோம்பலை முறித்தபடி முற்றத்தில் கால்களைப் பதித்தாள். இரவு பெய்த மழையினால் நீர் ஊறிப் பொருமி இருந்த நிலம், 'சில்'லென்ற குளிர்ச்சியை ஊட்டியது. அவளுக்கு அது வழக்கமான குளிர்ச்சிதான், பனியும் மழையும் அவளை வைகறைத்துயில் களைப்பை நிறுத்துவிட முடியாதவை. அவை அவள் தோழிகள்.

முற்றத்தில் தாழ்வாரத்தோடு சடைத்து வளர்ந்திருந்த சீமைக் கிளுவை மரங்கள் இருந்தாற்போல வீசிய காற்றினால் அலையுற்றன. ராணியால் உடனே ஒதுங்க முடியவில்லை. பன்னீர்த்துளிகளாகச் சிந்திய மழைத்துளிகள் அவள் உடலைத் தழுவிச் சிதறின.

''காய்...'' என்று உடலை நெளித்துக்கொண்டாள், ராணி. நிலத்தோடு சோரக் கட்டியிருந்த பாவாடையை மெது வாகத் தூக்கிப்பிடித்தபடி, முற்றத்தைக் கடந்து வந்து தலைவாசல் குந்தில் அமர்ந்து கொண்டாள்.

தலைவாசலும் வீடும் ஒன்றையொன்று நோக்கியவாறு கட்டப்பட்டிருந்தன. இரண்டையும் பாறைவாக இணைத்தபடி அடுக்களை அமைந்திருந்தது. இரண்டு அறைகளையும், நீளவாட்டில் ஒரு சாலையையும், குறுக்கு வாட்டில் இன்னொரு சாலையையும் கொண்ட பழைய காலத்து வீடு. வேலுப்பிள்ளையின் தகப்பன் கட்டி அரசோச்சிய அரண்மனை அது. சுவர்கள் செம்மண்ணினால் எழுப்பப்பட்டிருந்த போதிலும் சுண்ணாம்பு பூசி துப்பரவாக விளங்கின.

தலைவாசல் முற்றாகக் கல்கட்டிடம். கூரை தென்னங்கீற்றுகளால் வேயப்பட்டிருந்தது. அடுக்களை சிறிய தொரு குடிசை; குனிந்துதான் உள்ளே நுழைய வேண்டும். சுவர்களாக பனை மட்டைகள் நெருக்கமாக வரியபட்டிருந்தன.

ராணி திண்ணையில் இருந்தவாறு தனது வீட்டை ஒரு கணம் நோட்டம் விட்டாள். அவர்கள் சாதிக்குள், உண்மையில் அவள் குடும்பம் வசதியானதுதான்.

வேலுப்பிள்ளை உண்மையான ஒரு தொழிலாளி.

நேர்மைக்குப் பயந்த மனிதர் அவர்.

ராணி தனது விழிகளைத் தலைவாசலுள் செலுத்தினாள்.


எவ்வளவு அழுக்குத் துணி மூட்டைகள். அவை சுமை சுமையாகக் கட்டப்பட்டு வெளுத்துச் சலவை செய்வதற்காக ஒரு மூலையில் இருந்தன. மறு மூலையில், ஸ்திரிப் பெட்டியின் சூட்டினால் எரிந்து கறுத்த பாகங்களைக் கொண்டிருந்த நீள் மேசையொன்றில், சலவை செய்து மடித்த உடுப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

எத்தனை வீட்டு அழுக்கு மூட்டைகள் அவை.

அந்தச் சிவத்தக்கரைச் சேலையால் கட்டப்பட்டிருக்கும் துணி மூட்டை யாருக்குச் சொந்தமானது என்று ராணிக்கு நன்கு தெரியும். அது விதானையார் வீட்டிற்குரியது. அந்தச் சிவத்தக்கரைச் சேலையைத்தான் விதானையார் மனைவி அடிக்கடி வீட்டிற்குக் கட்டிக்கொள்வாள்.

ராணி கல்லூரிக்குப்போகும் வேளைகளில் பல தடவைகள் கண்டிருக்கிறாள். ஒரு சேலையைத்தான் மாற்றுது கட்டுகிறளோ என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்படுவதுண்டு.

---



ஒருவர்: மகளுக்கு சுதந்திரம் கொடாமல் ரொம்பக் கட்டுப்பாட்டோடு வளர்த்தன்... ஒருவனோடு ஓடி விட்டாள்.

மற்றவர்: எப்போ ஓடினவள்?

ஒருவர்: சுதந்திர தினத்தன்று.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் வண்ணார் பண்ணையிலேயே பணத்தால் கணிக்கத்தக்க ஒரு புள்ளி.

'ஏன் தான் இவ்வளவு கஞ்சத்தனமோ?'

அவளுக்கு ஒரு சம்பவம் நினைவிற்கு வருகின்றது. மறக்க முடியாத நிகழ்ச்சி அது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னுக இருக்க வேண்டும்.

அப்போது இந்தத் தலைவாசல் கல் கட்டிடமாக வில்லை; மண் தலைவாசலாகவே விளங்கியது. வேலுப்பிள்ளை ஊர்த்துணிகளை இத் தலைவாசலுள் தான் வைப்பது வழக்கம். நிலம் மண்ணுக இருந்ததால் பலகையினுல் 'அசவு' கட்டித்தான் ஊத்தைச் சுமைகளை அடுக்கி வைப்பார்.

அப்படி வைத்தும் ஒரு முறை ஒரு அழுக்குச் சுமை நிலத்தில் விழுந்து, ஒரு புறம் கறையானுக்கு இரையாகிவிட்டது. அக் கொடுமையை முதன் முதல் கண்டவள், ராணிதான். தந்தையை எழுப்பி வந்து காட்டினுள்.

வேலுப்பிள்ளை தலை மீது கைகளை வைத்தபடிகுந்தி விட்டார்.

''என்ன ஐயா, செய்வது? தற்செயலாக நடந்தது தானே?''

வேலுப்பிள்ளை மகளை ஏறிட்டுப்பார்த்தார். பின் கறையானுக்கு இரையாகிக்கிடக்கும் துணி மூட்டையைப் பார்த்தார்.

''உது விதானையார் வீட்டான், பிள்ளை. என்ரை இருபது வருஷத் தொழிலிலை உப்படி ஒருக்காலும் நிகழ்ந்ததில்லை...... நான் விதானையாருக்கு என்ன சொல்லப் போறன்......''என்று இடிந்து போனுர்.

அவள் மூட்டையை அவிழ்த்துப் பார்த்தாள். மேலே சுற்றிக் கட்டியிருந்த படுக்கை விரிப்பும், ஒரு சேலையுந்தான் கறையானுக்கு இரையாகி, நடுவால் பல்லை இளித்துக் கொண்டிருந்தன.

''ஆக ஒரு சேலையும் விரிப்புந்தானே, ஐயா.''

வேலுப்பிள்ளை பயந்தது போலவே நிகழ்ந்தது. விதானையார் ஏறிப் பாய்ந்தார்.

''உது என்ன வேலுப்பிள்ளை நீ செய்த வேலை? கவனக்குறைவாகக் கறையானுக்கோ, மாட்டுக்கோ கொடுத்திட்டு......உது சரிவராது......''

விதானையார் மனைவி இரண்டு முழம் பாய்ந்தாள்.

''என்ரை அருமந்த சீலை... உது, கட்டாடி, கறையான் தின்னல்லை... நீ மாத்துக் கொடுத்துக் கிழித்துப் போட்டாய்...''

வேலுப்பிள்ளைக்குப் பொய் பேசத் தெரியது. விதானையார் மனைவி கூறிய அபாண்டமான பழியைக் கேட்டு விதிர்த்துப் போனுர்.

''மாத்துக்கு நான் ஊர்ச் சீலையளைக் கொடுக்கிறதில்லை, பிள்ளை! அதுக்குப் புறம்பா வைச்சிருக்கிறன்...... கறையான் தான் தெரியாமல் தின்று விட்டுது......''

விதானையார் குறுக்கிட்டார்!

''அது எனக்குத் தெரியாது, வேலுப்பிள்ளை! உன்ரை கூலியிலை பிடிச்சுக் கொண்டுதான் தருவன்...''

''அப்படியே செய்யுங்கோ...'' என்றுர், வேலுப்பிள்ளை.

## ரயில் சுவை

யாழ்தேவி மதவாச்சி புகையிரத நிலையத்தை வந்தடைந்தது.

கந்தப்பு: அண்ணே, இந்த இடத்துக்கு மதவாச்சி என்று எப்படி பெயர் ஏற்பட்டது தெரியுமா?

சுப்பர்:- தெரியாதே...... எப்படி ஏற்பட்டது?

கந்தப்பு:- மதப்படி முன்பு இங்கு ஆட்சி நடைபெற்றதால் மதவாச்சி என்று பெயர் ஏற்பட்டது.

யாழ்தேவி புறப்பட்டது. அனுராதபுரத்தை அடைந்தது.

சுப்பர்: அது சரியண்ணே, அனுராதபுரம் என்று இந்த இடத்துக்கு எப்படி பெயர் ஏற்பட்டது?

கந்தப்பு: தெரியாதே...!

சுப்பர்: அனு என்றுல் தொண்ணுறு! தொண்ணுறு இராசாக்கள் இந்த இடத்தை ஆண்டபடியால் தான் அனுராதபுரம் என்று பெயர் ஏற்பட்டது.

— கனகேஸ்வரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று வேலுப்பிள்ளை வீடு திரும்பிய போது கூடவே நாகலிங்கத்தையும் கூட்டிவந்தார். நாகலிங்கம் ஒரு மேசன். அடுத்த இரு வாரங்களுள் மண் தலைவாசல் கல் கட்டிடமாக மாறி விட்டது. ஆனால், அம்மாவின் ஆறு பவுண் சங்கிலி அடைவு கடைக்குப் போய் விட்டது.

ராணி திண்ணையை விட்டு முற்றத்தில் இறங்கி அடுக்களையை நோக்கி நடந்தாள்.

ஃ

நன்றாகப் பொழுது விடிந்துவிட்டது. இன்னும் ஒருவரும் படுக்கையைவிட்டு எழும்பவில்லை. ஐயா நேரத்தோடேயே எழும்பி விடுவார். இன்று இன்னமும் எழவில்லை.

நேற்றிரவு அவர் படுக்கும் போது வழக்கத்தை விட நேரமாகிவிட்டது. கந்தையர் வீட்டு உடுப்புகளுக்குப் பெட்டி போட்டு முடிய நள்ளிரவாகி விட்டது. நாளை கடைக்காரக் கந்தையர் வீட்டு உடுப்புகள் கொடுத்தாக வேண்டும்.

'இராசு அண்ணன் வீட்டில்லை; அவன் மனைவியோடு மாமா வீட்டிற்குப் போனவன் ஒரு வாரமாகியும் திரும்பவில்லை. அவன் வீட்டிலிருந்தால் ஐயாவிற்கு வேலை மிகவும் குறைவு. மளமளவென்று பெட்டி போட்டு உடுப்புகளை அடுக்கி விடுவான்!

'ராணி, ஆச்சியை எழுப்பினாள்.

''என்ன பிள்ளை?...?

''விடிஞ்சு போச்சணை, எழும்பு...''

ஆச்சி எழுந்து பாயிலே குந்திக் கொண்டாள். அவளுடைய கை தலையணைக்குக்கீழ் எதையோ தேடியது.

''ஆ... துவங்கிட்டா...இருமல், சுருட்டுக் குடிக்கக் கூடாதென்றெல்லே அண்ணை சொன்னவர்...''

''அவன் கிடக்கிறான், பிள்ளை...பழகினபழகக்த்தைவிட முடியுமே? அது ஒரு தவனம்...... நெருப்புப் பெட்டியை எடுத்துத் தந்திட்டுப் போ, பிள்ளை...''

வேலுப்பிள்ளை எழும்பிப் பாயைச் சுருட்டி வைத்தார்:

''பிள்ளை, தம்பி எழும்பி விட்டானே? போன முறையும் குண்டு...... இந்த முறையாவது பாஸ் பண்ணினான் எண்டால்...''

''எழும்பவில்லை, ஐயா'...'' என்று கூறியபடி ராணி அறைக்குள் போனாள்.


''தம்பி, எழும்படா...போய் படி, ஏய், சுபத்திரா என்னடி இன்னும் நித்திரை, எழும்பு... கண்மணி எழும்பி முகத்தைக் கழுவு...பாய் எங்கேயோ கிடக்க மூலைக்கே வெறுந்தரையிலை கிடக்கிறாள்...''

ஃ

வீட்டு அலுவல்களையெல்லாம் முடித்துக் கொண்டு ராணி கல்லூரிக்குப் புறப்பட்ட போது நேரம் எட்டரையாகி விட்டது. ஆச்சி வழக்கம்போல முணு முணுத்தாள்:

''என்ன படிப்பு வேண்டிக்கிடக்கு......வயதும் பதினெட்டாச்சு... எங்கடை சாதிக்கை எங்க வீட்டைப் போல எங்கேனும் படிக்கினமே......''

''நாங்க படிக்கிறதாலை உனக்கு என்னணை ஆச்சி, கஷ்டம்...'' என்று கேட்டாள், ராணி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதில்லைப் பிள்ளை, குசினிக்கை முடங்கப் போகிற வண்ணாத்திக்குப் படிப்புத் தேவையே மூத்த பொம்புளைப் பிள்ளை வீட்டோடை இருந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும்......''

கனகசிங்கம் ஆத்திரத்தோடு குறுக்கிட்டான்:

''விசர்க்கதை கதையாதை ஆச்சி, நீயே உப்படிச் சொன்னால் மற்றவை என்ன சொல்லுவினம்......நாங்க எல்லாம் படிக்காமை சீலையளைத் தோய்த்துத் திரிய வேண்டும் என்று நீயும் எண்ணுகிறாய்......உது இனிச் சரிவராது...அக்காவும் படிக்கிறது தான்...கண்மணியும் படிக்கிறது தான்... நானும் படிக்கிறது தான்... சுபத்திரா மூதேசிதான் படியாது நெசவுக்குத் திரியுது...''

நெசவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த சுபத்திராவிற்குக் கனகசிங்கம் கூறியது கேட்டது.

''இஞ்சை...மூதேசி, கீதேசி என்று பேசாதை...நீர் படிப்பிலை திறமே... போனமுறையும் எஸ். எஸ். ஸி. குண்டு...பேச வந்திட்டார்...''

''இந்த முறை பாரடி,வந்து 'சீ'யோடு பாஸ் பண்ணிக் காட்டுறன்......''

''எங்கடை அண்ணை இந்த முறை கட்டாயம் பாஸ் பண்ணுவார்'' என்றாள், கண்மணி. கனகசிங்கத்திற்குத் தன்னைப் பகிடி பண்ணுவது போலப் பட்டது. 'நறுக்'கென்று கண்மணியின் தலையில் குட்டி விட்டான்.

''பார், அக்கா...'' என்று சிணுங்கினாள், கண்மணி ராணி தம்பியைக் கடிந்து விட்டுக் கண்மணியை அணைத்துக் கொண்டாள்.

இவற்றை எல்லாம் பார்த்தபடி வீட்டுத் திண்ணையில் குந்தியிருந்தார், வேலுப்பிள்ளை, குழந்தைகளின் சண்டையில் தலையிடுவது கிடையாது. அமைதியாகப் பார்த்து ரசித்துக் கொள்வார்.

அடிதடி அளவிற்கு அவர்களது சண்டை போனது கிடையாது. போனாலும் ராணி இருக்கிறாள்.


கனகசிங்கம் எப்போதுமே துடுக்கானவன்! தங்கைகளோடு ஓயாது சண்டை போடுவான். சுபத்திராவும் அவனைப் போன்ற வாயாடிதான். கண்மணி தான் பாவி. ஆனால், மூவரும் தமக்கைக்கு அடக்கம்.

'ராணி தலைமை வகிக்கப் பிறந்தவள்.'

குழந்தைகள் படித்து முன்னேறுவதைப்பற்றி வேலுப்பிள்ளைக்கு மிக மகிழ்ச்சியே. அவர் சாதிக்குள் அவரது குழந்தைகள் தான் படிக்கிறார்கள்.

ராணி இம்முறை பல்கலைக் கழகத் தேர்வு எடுக்கப் போகிறாள். நிச்சயமாகச் 'சித்தியடைவாள் என்பதில் அவருக்குச் சந்தேகமேயில்லை. அதன் பின் அவளைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்புவதா என்பது தான் பிரச்சனைக்குரிய வினாவாக உருவெடுத்துள்ளது.

பண விஷயத்தைப் பொறுத்தமட்டில் அவர் ஏழையுமல்லர்; பணக்காரருமல்லர். முதுசக் காணிகளும், சீதனக் காணிகளும் இருக்கின்றன; பள்ளக் காணிகள் தாம். நேர்மையாகத் தனது தொழிலைச் செய்து முன்னேறியவர் அவர். தொழில் நன்கு நடக்கிறது; சுபத்திரா நெசவுக்குப் போய் உழைக்கிறாள். ஆனால்—




ஏன் உன் கணவர் கோபித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்?

'ஜெகஜோதி' பற்பொடி வேணுமாம். கடைக்குப் போய் அதை வாங்கி வந்து பல் தேய்த்த பிறகுதான் காப்பியே சாப்பிடுவாராம்.


பிறவுண்சன்

**பிஷ் மக்ஸ்**

**இப்பொழுது உங்கள் வளர்ப்பு மீன்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கிறது.**




பிறவுண்சனின் 'பிஷ்மக்ஸ்' மீன்களின் இயற்கை உணவாகிய 'பிளாங்ரன்' சேர்க்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனை சின்னத்தம்பி வடிவில் அல்லவா இருக்கிறது. சின்னத்தம்பி பொன்னுவின்— அவர் மனைவி— தமையன் மகன். தமையனின் மகனைத்தான் மூத்தவன் இராசுவிற்குக் கட்டி வைத்திருக்கிறாள், அவள்.

சின்னத்தம்பி ராணிக்காக வளர்பவன். கலியாணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான்.

தந்தையோடு சேர்ந்து தொழில் செய்யும் அவன், ராணி தொடர்ந்து மேல் படிப்புப் படிப்பதை விரும்புவானா?

இது விடயமாக வேலுப்பிள்ளை தனது மூளையைப் பல தடவைகள் குழப்பி இருக்கிறார். பதில் தான் கிடைக்கவில்லை.

ராணியைப் படிப்பால் மறிப்பதா?

''என்ன படிப்பு வேண்டிக் கிடக்கு......... உவையள் படிச்சு என்ன உத்தியோகம் பார்க்கப் போகினமே...... சும்மா மறிச்சுப் போட்டு வீட்டு அலுவலைப்பார்க்கச் சொல்லு...''

''உந்த வயதிலை நாங்க ரெண்டு பிள்ளையளும் பெத்துப் போட்டம்... என்ன படிப்பு வேண்டிக்கிடக்கு...''

''உந்த விதானையார் கூடத் தன்ரை மோளை மறிச்சுப் போட்டார்... நீ படிப்பிக்கிறாய்...''

— இப்படி எத்தனையோ பேர்களது அபிப்பிராயங்களை அவர் கேட்டிருக்கிறார்.

"நாங்க எல்லாரும் படிக்க வேணும், ஐயா! படிக்காததாலை தான் எங்கடை சாதி இப்படிக் கிடக்கு... படிப்பாலை தானே எல்லாரும் முன்னேறி இருக்கினம்...... எங்கடை ரீச்சர் கூட இதைத்தான் சொல்கிறா... உங்களைக்கும்பிட்டுக்கேட்கிறன் ஐயா, எங்களை மறிச்சுப் போடாதையுங்கோ...—'' என்று ஒரு நாள் ராணி கூறினாள்.

'ராணி இந்தச் சாதியிலை பிறக்க முடியாதவள். தப்பித்தவறிப் பிறந்து விட்டாள்! என அவர் எண்ணிக் கொள்வார்.

'அவள் அடக்கம், அழகு... இவை ஆருக்கு வரும்...... அவள் ஒரு அரசகுமாரி...' என்றும் பல தடவைகள் அவர் மனம் கூறிக் கொள்ளும்.

''ஐயா போயிட்டுவாறம்...'
— ராணி
''ஐயா போயிட்டுவாறம்...'
— கண்மணி.
''ஐயா போயிட்டுவாறம்...'
— சுபத்திரா.
''போயிட்டு வாறம்......''
— கனகசிங்கம்.

''எல்லாருக்கும் ஐயாதான் வேணும், ஆச்சி தேவையில்லை'' என்று பொன்னு முணு முணுத்தாள். (தொடரும்)

---

சேலியர் கெரேசா என்பவர் தான் பதக்கங்கள் பெற வேண்டுமென்ற தீராத ஆசையை ஒரு குறுக்கு வழியைக் கையாண்டு தணித்துக் கொண்டார். அவர் கையாண்ட குறுக்கு வழி இராணுவ பண்டகசாலையில் புகுந்து பதக்கங்களை களவாடியதேயாகும்:

அது மட்டுமல்ல அவர் பதக்கங்களை அணிந்து கொண்டு ராணுவ விருந்தொன்றிலும் கலந்து கொண்டார்.

ஆனால் அவர் அணிந்திருந்த பதக்கங்களில் இரண்டு பெண்கள் அணியும் பதக்கமாக இருந்த படியால் களவு பிடிபட்டு பின் கம்பி எண்ணினார்.

---


தரமான கதைகளுக்கு
சுவையான நாவல்களுக்கு
கருத்து செறிந்த கட்டுரைகளுக்கு
**கல்கி** படியுங்கள்

# மாத ஜோதிடம்

—தமிழ் மாத சஞ்சிகை—

ஜோதிடரின் உதவியின்றியே
ஜோதிடம் பார்க்க
சிறந்த மாத இதழ்.

த. தம்பித்துரை அன் சன்ஸ்,
யாழ்ப்பாணம். — கொழும்பு.
போன்: 82878


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 வயதுடையவர் 40 வயது ) தோற்றம்
) வீர்யம்
40 வயதுடையவர் 20 வயது ) பலம்

ஆகியவற்றை ஒருங்கே பெற இன்றே

# மதன மித்திரன்

வாங்கிப் பாவித்து

பலக்குறைவு காரணமாக இல்வாழ்க்கையில் நெருங்கியதும் ஏற்படும் ஆசாபங்கங்களினுல் ஏற்படும் மனக் கசப்பு, வெறுப்பு, முகச் சுளிப்பு, நடுக்கம், சோர்வு, பலயீனம், பசிக் குறைவு, இடுப்பு, முதுகு, கணுக்கால் ஆகியவற்றில் ஏற்படும் வலிகள், சொற்பனத்தில் சக்தி நழுவுதல், நித்திரைக் குறைவு ஞாபக மறதி போன்ற அநேக நோய்கள் நீங்கி நரம்புகள் முறுக்கேறி உங்கள் சொந்த ஆரோக்கியத்தையும், வீர்ய பலத்தையும் பெறுவதுடன் மீண்டும் வாழ்க்கையை உங்கள் பால்யத்தில் அனுபவித்தது போன்று இளமை ததும்ப அனுபவிக்கத் தரவல்ல ஔஷத வீர்யம் நிறைந்தது.

விலை தபாற் செலவுடன்
40 வேளை ரூ. 10-90
80 வேளை ரூ. 20-00

ஏஜன்ட் இல்லாதவூர்கட்கு ஏஜன்ட்கள் தேவை.

**கலா நிலையம்,**

தபாற் பெட்டி 372,
19/1, செட்டியார் தெரு,
கொழும்பு-11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைப் பொங்கல்

—ஆ. த. சித்திரவேல்—

வெள்ளவத்தையில் நான் இருந்த 'வாடகை அறை'க்கு அண்மையில் உள்ள தமிழர்களின் — குறிப்பாக இந்துக்களின் வீடுகளில் வெடிச் சத்தங்கள் கேட்டன. அப்போது தான், ஓகோ! பொங்கலும் வந்துவிட்டது என்பது ஞாபகத்திற்கு வந்தது.

பொங்கலுக்கு வீட்டுக்குப் போகலாமென்றால் மார்கழிக் கடைசியில் 'வக்கேஷன்' லீவில் போய்வந்ததால் 'பண நெருக்கடி.' அத்துடன் பொங்கலன்று எங்கள் கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்தால் 'ஓவர் டைம்' கிடைக்கும். இரு காரணங்களும் ஒருசேர 'பொங்கல் விஜயம்' தடைப்பட்டது.

13-ஆம் திகதி இரவு. வெடிகள், பூந்திரிகள், ஈக்கு வாணங்கள் எல்லாம் என் அறையை அதிரவைத்தன. அவை தான் எனக்கும் பொலிவை அளித்தன.

அந்த வீட்டில் உள்ள பிள்ளைகள்—அதாவது சின்னஞ்சிறுசுகள், மேலே யன்னலால் வேடிக்கை பார்க்கும் என்னுடன் மெல்லச் சிரிப்பது, கதைப்பது வழக்கம். 'மாமா...மாமா...' என்று என்னைக் கூப்பிடும்போது எனக்கு உள்ளூரக் கிளுகிளுப்பு. கொழும்பிலும் எனக்கு மருமக்கள் இருக்கிறார்கள் என்றுதான். சிலவேளைகளில் அந்தச் சின்னஞ்சிறுசுகளைக் கடற்கரைக்கும் கூட்டிச்சென்று கடலை, சுண்டல், ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்ததுண்டு. இதனால் பிள்ளைகளின் பெற்றோர்களும் என்னுடன் கதைக்க ஆரம்பித்தார்கள். இது ஆரம்ப வரலாறு.

மறுநாள் அதிகாலை, சின்னஞ்சிறிசுகள் வீட்டில் பொங்கல். அவர்களின் பொங்கல்தான் உண்ணக் கிடைக்குமென்று முழுக்க முழுக்க நம்பியிருந்தேன். இதில் தான் தவறு இல்லையே!

வெடிகளின் மத்தியிலும் நித்திராதேவியின் வேண்டுகோளைப் புறக்கணிக்காது சங்கமமானேன்.

கோர்வை வெடியின் கொடூரமான சத்தம் என்னைப் போர்வையை உதறிவிட்டு எழச் செய்தது. ஓகோ இப்போதான் பொங்கல் பொங்கி வழிகிறதோவென யன்னலால் எட்டிப்பார்த்தேன். சந்தேகமில்லை. வெடியின் சத்தத்தினாலோ என்னவோ பொங்கிக் கிழக்கே சரிந்தது. சின்னஞ்சிறிசுகளின் மணிக்கண்கள் என்னைக் கண்டுவிட்டன. கண்டது தான் தாமதம், 'அங்கே மாமாவை சதீஸ்' என்று தம்பிக்கு என்னைக் காட்டினான் சுரேஷ். மெல்லக் கழுத்தை உள்ளே இழுத்துக்கொண்டேன். அத்துடன் மறுபடியும் வந்து படுத்துக்கொண்டான்.

மீண்டும் கோர்வை வெடி. மெதுவாக எழுந்து யன்னலை நீக்கி 'ஒழிந்துநின்று' பார்த்தேன். பொங்கிப் படைத்துத் தேவாரம் ஓதிக்கொடுத்திருந்தார்கள். பிள்ளைகளின் தகப்பனார் தான் முதலில் தேவாரம் ஓதினார். பின்னர் அவரின் மூத்த மகன் ஏழுவயதான பாலகணேஷ் 'சொற்றுணை வேதியன் சோதி



நேற்று கச்சேரியிலே நீங்கள் ததரீன் ரீன்னு ராகம் இழுத்த போதெல்லாம் எல்லோரும் உங்களையே பார்த்து கிட்டிருந்தோம்.

ஓகோ! கல்யாணி ஆலாபனையைச் சொல்றேளா?

அதில்லை உங்கள் பற்கள் ஜெகஜோதியாய் பளிச் சென்று இருந்ததே எப்படி என்று!

ஓகோ அதா நான் பாவிப்பது ஜெகஜோதி பற்பொடியல்லவா!


சங்கானையில்

உங்கள் ஜவுளிகளை

மலிவாகவும்
சிறந்தவையாகவும்
பெறுவதற்கு

இன்றே விஜயம் செயயுங்கள்:

கே. பி. செல்வநாயகம்
அன் சன்ஸ்,

(லங்கா சலுசலா
வினியோகஸ்தர்கள்)

நிர்: 6, மார்க்கட்,
சங்கானை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவன்...' என்ற தேவாரத்தைப் பண்ணுடன் ஓதினான். நான் மெய்மறந்து ஆனால் ஒளிந்துநின்றுதான் ரசித்துக் கொண்டிருந்தேன்.

பொங்கிப் படைத்து, தேவாரம் ஓதி எல்லாவற்றையும் உள்ளுக்கும் எடுத்துக்கொண்டுபோய் விட்டார்கள். இனி என்ன ஐந்து நிமிடத்திற்குள் பொங்கல் உண்ணலாமென்று கட்டிலில் மெல்லப்படுத்தேன். சந்தேகமில்லை, ஐந்து நிமிடத்தில் கதவு தட்டும் ஓசை. பொங்கலை நினைத்தவுடன் நாக்கில் நீர் சுரக்க சோம்பல் முறித்து எழுந்து கதவைத் திறந்தேன். அங்கே அடுத்த அறையில் இருக்கும் ஸ்ரீஸ்கந்தராசா நின்றான்.

''என்ன'' என்ற நான் நினைவு வந்தவனாக, ''பொங்கல் வாழ்த்துக்கள்'' என்றேன்.

அவனும் பதிலுக்கு, பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்'' என்றான். பின்னர் ''உன்னிடம் பிளேட் இருந்தால் தாடா...பிறகு வாங்கித்தாறன்' என்று நசித்தான்.

''காலங்காத்தாலையிலை இரவலுக்கு வந்திட்டான்'' என்று மனத்துள் திட்டியபடி பிளேட்டைக் கொடுத்து ஆளை அனுப்பிவிட்டு நாக்கில் சுரந்த நீரை உமிழ்ந்து துப்பிய பின்னர் மீண்டும் வந்து படுத்துக்கொண்டேன்

மறுபடியும் நித்திராதேவியின் அரவணைப்புக்குள்ளானேன்.

திடுக்கிட்டு விழித்தேன். நேரம் போய்விட்டது போல் தோன்றியது. அவசர அவசரமாக எழுந்து நேரத்தைப் பார்த்தேன் பத்தேகால். பொங்கல் வரவில்லை.

'அப்பாடியென்று' காலைக் கடன்களை முடித்துவிட்டு கடைக்குப்போகும் எண்ணத்தில் மாடிப் படியைவிட்டுக் கீழே இறங்கி வந்தேன். அங்கே பாலகணேஷ் விளையாடிக் கொண்டிருந்தான். ஒரு வேளை பொங்கல் உணவைக் கொண்டுவந்து, கதவைத் தட்டி நான் எழும்பாததால் திருப்பிக் கொண்டு போய்விட்டார்களோ என்ற நப்பாசையால், ''ஹலோ பாலகணேஷ் ஹப்பி பொங்கல்'' என்று கூறி ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துப் பார்த்தேன். 'ஐடியா' எடுபடவில்லை. ஹொட்டேலை நோக்கி நடந்தேன்.

விழுந்து விழுந்து உபசரித்தான் கடைச்சிப்பந்தி. ''வாங்க சேர்...ஏன் இவ்வளவு நேரமும் எங்கே போயிருந்தீர்கள்...'' என்றான் கரிசனையுடன்.

பொங்கலை எதிர்பார்த்து ஏமாந்துபோன கதையையா சொல்வது?

''சும்மா தெரியாதே'' என்று சமாளித்துக்கொண்டேன்

''சேருக்குப் பொங்கல் ஒன்று தரவா?'' சிப்பந்திதான் கேட்டான். சிப்பந்தியின் உபசாரம் கண்டு பெருமைகொண்ட நான் சின்னஞ் சிறுசுகளின் வீட்டுக் காரர்களில் பொறுமை கொண்டதில் தவறில்லை.

''சரி பொங்கல் கொண்டு வா பாப்பம்''

''ம்...வாழைப்பழம்...'' சிப்பந்தி.

''ஆ...ஆனமாலை வாழைப் பழத்திலை ஒண்டு தா''

ஒரே இனிப்பு...... சர்க்கரை போட்டாங்களோ...சர்க்கரின் பேட்டாங்களோ என்ற ஆராய்ச்சியில் இறங்கினேன். அதில் வெற்றியும் கண்டேன். பெயருக்குக் கொஞ்சம் சர்க்கரையும், மிகுதி சர்க்கரினும் போட்டிருந்தார்கள் கண்டுபிடித்த கதையையும் சொல்லித்தான் தீரவேணும். சரி சொல்லுகிறேன்.

நல்லமுறையில் உபசரிப்பதற்காக ஒரு சிப்பந்திக்கு மாதம் ஐந்து ரூபா இரகசியமாகக் கொடுப்பது வழக்கம். அவனை அணுகி சர்க்கரையா, சர்க்கரினா என்று கேட்டேன். அவனின் பதிலே எனது ஆராய்ச்சியின் முடிவு. பொங்கல் சாப்பிடத் தொடங்கிய சிறிது நேரத்தில் இன்னொரு ஆராய்ச்சியையும் மேற்கொள்ளத் தீர்மானித்தேன்.

அதுதான் பொங்கலுக்கு நெல், கல் ஆகியவற்றுடன் அரிசியும் போட்டிருக்கிறார்களா என்பது பற்றிய ஆராய்ச்சி.

ஏதோ பசிக்குச் சாப்பிட்டாக வேண்டுமே. இன்னொரு முறை பொங்கல் தருவித்துச் சாப்பிட்டேன். சாப்பிட்டு முடிந்தது. 'எருமைப்பால் 'டின்பால்' போட்ட தேத்தண்ணி குடிக்கக் கூடாதென்ற குடும்ப ஆயுள் வேத வைத்தியரின் எச்சரிக்கையின் பேரில் 'ஒரு சிங்கிள் பிளேன்ரி'யும் குடித்துவிட்டு பில்லைக் கேட்டேன்.

'ஒரு ரூபா இருபத்தேழு சதம்'

சிப்பந்தியைப் பார்த்து முழித்தேன். ஆனால் அவன் பயப்படவில்லை. ''இரண்டுமுறை பொங்கல் ஒரு ரூபா.........ஆனமாலை வாழைப்பழம் இருபது...... பிளேன்றி ஏழு.........மொத்தம் ஒரு ரூபா இருபத்தேழு சதம்...'' என்றான்.

சாப்பிட்ட பொங்கல் செமித்துவிட்டது. சோம்பலை முறித்துக்கொண்டு வெளியேறினேன்.

அப்பப்பா பொங்கலோ பொங்கல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமே வேஷங்கள்!

(து. வைத்திலிங்கம்)

யாழ்ப்பாணப் பரவைக் கடலிலிருந்து வீசியமென் காற்று சுற்றுப் புறங்களிலுள்ள பூமரங்களுடன் உறவாடி மலர்களின் சுகந்த மணத்துடன் உடலுக்கும் உள்ளத்துக்கும் பரவசமூட்டிய போதும், மனோகரன் ஏதோ பித்துப்பிடித்தவன் மாதிரி அப்பூங்காவில் ஒரு ஓரமாக அமர்ந்திருந்தான்.

இன்று காலை முழுவதும் அவன் போட்ட திட்டங்கள் என்ன?

இப்பொழுது நடப்பதென்ன?

சே! இவளை நம்பி நான் மோசம் போக இருந்தேனே!'' வாய் வெறுப்புடன் முணுமுணுக்க கை விரல்கள் தலையின் சுருண்டிருந்த கேசக் கற்றையை அளைந்தன.

மயக்கம் தரும் அந்த மாலைப் பொழுதில், யாழ்ப்பாணம் மாநகர ஆட்சி மன்றத்துக்கு முன்னால் அமைந்திருந்த பூங்கா மிகவும் கலகலப்பாக பொலிவுற்றுத் திகழ்ந்தது. இளம் சிறார்கள் மகிழ்வினால் எழுப்பிய குதூகலக் குரல்கள் அழகிய அப் பூங்காவுக்கு மேலும் சோபையை அளித்தன. பெரும் பாலும் குழந்தைகள் கூடிக் களிக்கும் அப் பூங்காவில் இன்ப மயக்கத்தில் ஆழ்ந்து கையுடன் கை கோத்து தம்மையே மறந்து உலாவிய இளம் ஜோடிகளுக்கும் குறைவில்லை. இவைகளையெல்லாம் மனோகரனுக்கு எரிகின்ற நெருப்பில் எண்ணையை ஊற்றினால் போல் இருந்தது.

மனோகரன் விளையாட்டு போதனாசிரியர் பதவியேற்று யாழ்ப்பாணம் வந்து ஒரு வருடமாகின்றது. முல்லைக் குளம் கிராமத்தில் பிறந்த மனோகரன் யாழ்ப்பாணத்துக்கு வேலை ஏற்று வந்த பின் தன் கிராமத்தையே வெறுக்க ஆரம்பித்து விட்டான்.

கானல் நீரை நம்பிச் செல்லும் பிராணி போல் பட்டின மோகம் அவனை, தன் கிராமத்தை வெறுக்கச் செய்தது. நகரக் காரியாதிகாரியின் கீழ் பணியாற்றும் மனோகரனுக்கு சுற்று வட்டாரத்திலுள்ள பாடசாலைகளுக்கும், விளையாட்டு சங்கங்களுக்கும் சென்று, விளையாட்டுத் துறையை முன்னேற்றுவதற்கான யோசனைகளைக் கூறி, போதனா வகுப்புகளை நடத்துவது முக்கிய பணியாய் இருந்தது.

அப்படிப் போகும் போது தான் ராஜரத்தின மாஸ்டரின் நட்புக் கிடைத்தது.

ராஜரத்தின மாஸ்டர் நகரத்தில் உள்ள ஆண்கள் கல்லூரி ஒன்றில் சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர். சாதாரண நட்பாக இருந்து, பின் தினமும் சந்தித்து கலந்து உரையாடும் அளவுக்கு நட்பு வளர்ந்து விட்டது. ராஜரத்தின மாஸ்டர் தோற்றத்தில் ஐம்பது வயதுக்காரர் மாதிரி காட்சி அளிப்பார் அவருக்கு சர்க்கரை வியாதி. இரட்டை நாடித் தேகம்.

''நீங்கள் எப்பொழுதும் கலகலப்பாக குழந்தை மாதிரி இருக்கிறீர்கள் சார்!- மனோகரன் அடிக்கடி கூறுவான்.



''என்ன செய்கிறது தம்பி! இருக்கிறது கொஞ்ச நாள்! அதற்குள் சிரித்து மகிழ்ந்து விட்டாவது இறந்து போவம்!'' அவர் ஒரு வித விரக்தியுடன் பேசுவார், ஆனால் அதிலும் ஒரு சிரிப்புக் கலந்திருக்கும்.

''மிஸ்டர் மனோகரன், நீங்கள் ஒரு நாள் என்னுடைய வீட்டுக்கு வரவேண்டும்!''

மனோகரன் அந்த வேண்டுகோளுக் கிணங்கி மாஸ்டரின் வீட்டுக்கு போகின்றான்.

பரங்கித் தெரு நகரத்தில் பிரபல்யமான இடம் என்று மனோகரன் முன்னர் கேள்விப்பட்டிருக்கின்றான்.

ஆனால் இன்று தான் அங்கு போகின்ற சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரங்கியர் இருந்தார்களோ இல்லையோ - இப்பொழுது அது உண்மையாகவே பரங்கித் தெரு மாதிரித்தான் காட்சி அளித்தது. சடைநாய் மாதிரி தலைமயிர் முன் நெற்றியையும் கண்ணையும் மறைக்க, உடலை இறுக்கும் உடையுடன் அரைப் பயித்தியம் பிடித்தவர்கள் மாதிரி தோற்றமளிக்கும் இளைஞர்கள் ஏதோ புதையல் தேடுவது போல் சந்திக்கு சந்தி சயிக்கில்களுடன் நிற்கிறார்கள்!

அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு - இவையெல்லாம் ஏட்டுச் சுரைக்காய் - அவை கறிக்குதவாது என்ற பெரு நம்பிக்கையில் அவையாவற்றையும் காற்றிலே பறக்க விட்டு, உடலின் முக்கால் பாகம் காற்றுப்பட விட்டபடியே அரை குறை ஆடையுடன் உலாவிய புதுமைப் பெண்கள்...... இளைஞர் உலகம் பரங்கித் தெருவில் புது யுகம் நோக்கிபீடு நடை போடுகின்றதோ......!

ஒருமுறை தலைமயிர் உரிய காலத்தில் வெட்டாத படியால் தலைமயிர் முன் நெற்றியை மறைக்க, வகுப்பறையில் நுழைந்த மனோகரனை அவனது வகுப்பாசிரியரான சாம்பசிவ வாத்தியார், தனது கைப்பிரம்பால் அவனது முதுகில் நாலு முறை 'மரியாதை' செய்து, தன் மடியில் இருந்து பணம் எடுத்து' உடனே போய் பரியாரி நாகலிங்கத்தைக் கொண்டு முடி வெட்டி வா!'- என்று கூறி அனுப்பி வைத்தது மனோகரனுக்கு இந்நேரம் ஏதோ தெரியாது ஞாபகத்துக்கு வந்தது.

தவிர இந்த நேரம் முல்லைக் குளம் கிராமத்தில் இளைஞர்கள் ஊர் திடலில் வரிந்து கட்டிக் கொண்டு 'வொலிபோல்' அடிக்கும் காட்சியும் அவனது மனத் திரையில் ஓடி மறைந்தது.

ராஜரத்தினம் மாஸ்டரின் வீட்டுக்குள் மாஸ்டர் முன்னே செல்ல மனோகரன் அவரைப் பின் தொடர்ந்தான்.

வட்டச்சாடிகளில் செம்மண் போட்டு, கத்தாளைச் செடியும் கள்ளிச் செடியும் வரிசையாக நட்டு வைத்திருப்பதை அவன் கவனிக்கத்தவறவில்லை.

அதே நேரத்தில் தன் வீட்டு முற்றத்தில் துளசியும் செவ்வரத்தைக் கன்றுகளும் வரிசையாக நட்டு வைத்திருப்பதை எண்ணிக் கொண்டான்.

உள்ளே வரவேற்பறையில் நுழைந்தார்கள் பெண்கள் இருவரும், ஆண் ஒருவரும் கதைத்துக் கொண்டிருந்தனர்.

''தம்பி இப்படி இரும்! இவர்தான் இப்ப எங்கடை இடத்துக்கு புதிதாக வந்திருக்கின்ற 'ஸ்போட்ஸ் ஒப்பீசர்!'' மாஸ்டர் அறிமுகப்படுத்தினார்.

இவ என்னுடைய 'வைவ்' குணம். இவ எனனுடைய மகள் லீலா, இவர் என்னுடைய நண்பர் ஜெயசீலன், இவர் கூட்டுறவு பரிசோதகராய் இருக்கிறார்'' மாஸ்டரின் அறிமுகம் தொடர்ந்தது.

அவரின் மனைவி குணம் மிக அழகாக இருந்தாள். இளமைக் கோலம் கொலு வீற்றிருந்தது- அவளது மேனியில், நன்றாகச் சிரித்து கலகலப்பாக உரையாடினாள்.

இவளுக்கு என் அக்காவின் வயதுதானே இருக்கும்!

என்ன பதவிசாய் இருக்கிறாள்!

அங்கே கிராமத்தில் அக்கா என்நேரமும் அழுது வடியும் குழந்தைகளுடன் அடுக்களை, மாட்டி என்று அலைந்து கொண்டிருப்பார். நெற்றி நிறைய விபூதியும், பெரிய குங்குமப் பொட்டும்......''

நினைக்கவே கசந்தது அவனுக்கு

ராஜரத்தின மாஸ்டரின் மகள் லீலா மனோகரனின் சிந்தையைக் கவரத் தவறவில்லை. பருவத்தின் பூரிப்பில் திகழ்ந்து வாழ்க்கை என்னும் நூலின் வசந்தமான ஏடுகளைத் தட்டிப்பார்க்க துடிப்புடன் இருக்கும் வண்ணத்துப் பூச்சியாக வட்டமிடும் விழிகளுடன் காட்சி அளித்த லீலா, மனோகரனின் கனவுகளுக்கும் சிந்தைக்கும் விருந்தாக நின்றாள்.

ஆனால் மாஸ்டரின் வீட்டில் காட்சி அளித்த மூன்றும் மனிதரான ஜெயசீலனை அவனுக்குப் பிடிக்கவில்லை.

சுருண்ட முடியும், கறுத்து அடர்ந்த மீசையும், சிகரெட்டும் உதடுமாய் தோற்றிமளித்த ஜெயசீலனை ஏனோ தெரியாது வெறுத்தான்.

---



ஒருவர்: நான் தமிழ் இனத்திற்காக என் ஆவியை விடத் தயார்!

மற்றவர்: கொட்டாவி விடத் தயாரென்று சொல்லுங்கள் ... உங்களுடைய வீரம் எனக்குத் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சந்தர்ப்பத்தை தொடர்ந்து அடிக்கடி மனோகரன் ராஜரத்தின மாஸ்டரின் வீட்டுக்குச் செல்லும் வாய்ப்புகள் கிட்டின.

ஒவ்வொரு சமயம் போகும் போதெல்லாம் அவனுக்கு பெரும் பாலும் ஏற்படுவது வியப்புணர்வுதான்.

அழகான மனைவி. ஒரே ஒரு மகள் லீலா, கை நிறையச் சம்பளம்;- இவையாவும் இருந்தும் ராஜரத்தின மாஸ்டர் ஏன் விரக்தியுடன் காணப்படுகின்றார்? இது அவனது மனதை நெடுநாள் அரித்த விஷயம்! அவன் மாஸ்டரின் வீட்டுக்கு எப்பொழுது செல்கின்றானோ அப்பொழுதெல்லாம் சிகரெட்டும் கையுமாக ஜெயசீலன் அங்கு அமர்ந்திருப்பான்.

சில சமயங்களில் குணம், லீலா, ஜெயசீலன் மூவரும் 'காட்ஸ்' விளையாடிக் கொண்டிருப்பார்கள், மாஸ்டர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்.

சில சமயங்களில் மனோகரனும், மாஸ்டரும், லீலாவும் 'காட்ஸ்' விளையாடும் போது குணமும், ஜெயசீலனும் வேடிக்கை பார்ப்பார்கள்.

எத்தனையோ தடவைகள் ஜெயசீலனும் குணமும் சுவையான சம்பாஷணையில் ஆழ்ந்திருப்பார்கள்.

மனோகரன் ஆச்சரியத்துடன் இதைக் கவனிப்பான்.

''தம்பி, எனக்கும் நோய் அதிகமாய் வருகிறது. விரைவில் எனது மகள் லீலாவின் திருமணத்தை நடத்த வேண்டும்...!'' மாஸ்டர் பேச்சினூடே ஒரு நாள் குறிப்பிட்டார் ''நீங்கள் வீணாய் கவலைப்படுகிறீர்கள் மாஸ்டர்! அதது உரிய காலத்தில் நடக்கும் தானே!''

'குறுகுறு விழியும், எடுப்பான நாசியும், அலைபாயும் கூந்தலும் மெல்லுடலும் கொண்ட அழகி லீலாவை மனைவியாய் அடைபவன் பாக்கிய சாலியாய் இருப்பான்' மனோகரன் தனக்குள் ஏக்கத்துடன் கூறிக் கொள்ளுவான்.

ஆரம்பத்தில் கூச்சப்பட்ட லீலா மனோகரனுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தாள். தன்னுள் இன்பக் கனவு காணத்தொடங்கி விட்டான் மனோகரன். தினமும் மாலை மாஸ்டரின் வீட்டுக்குச் செல்ல ஆரம்பித்தான்.

ஒரு நாள் நகரத்திலுள்ள பிரபல உணவுச் சாலையிலிருந்து ஐஸ் போட்ட 'சொக்லட்' வேண்டிக் கொண்டு லீலாவைப் பார்க்க விரைந்து சென்றான்.

'ஓ! ஐஸ் சொக்! எனக்கு இது பிடிக்குமென்று எப்படி உங்களுக்குத் தெரியும்?'

—தலையை ஒரு புறமாய் சரித்துக்கொண்டே கொஞ்சல் மொழியுடன் கேட்டாள் லீலா. அந்தக் கணமே மனோகரன் தன்னை மறந்தான்.

'என்ன இருந்தாலும் லீலா படித்தவள்; பண்புள்ளவள்; அழகி!'—இது லீலாவைப் பற்றி அவன் தன்னுள் வளர்த்துக் கொண்ட அபிப்பிராயம்.

அதே நேரத்தில் தன் கிராமத்தில் இருக்கும் அவனின் மாமன் மகள் ராசாத்தியின் நினைவு வந்தது.

'சுத்தப் பட்டிக்காடு!'— நினைவே கசந்தது.

'டேய் மனோகரன், ராசாத்தி உனக்கென்று வளர்ந்து வருகிறாள். அவளை ஏமாற்றாமல், வருகிற தை மாதமென்றாவது கல்யாணத்தை முடிக்கவேண்டும்!'


-மனோகரனின் தாய் சொர்ணம்மா கூறும்போது அவனுக்கு அவனையறியாமல் கோபம் பொத்துக்கொண்டு வரும்.

கிராமத்திலுள்ள சைவப் பாடசாலையில் எட்டாவது வகுப்பு வரை படித்த ராசாத்தி லீலாவைப்போல் உதட்டுச் சாயமும், கை கால் நகங்களுக்கு பூச்சுப் பூசும் காரிகையல்ல!

காலையில் படுக்கையில் இருந்து கொண்டே தேநீர், கோப்பி அருந்தும் வழக்கம் அவளுக்கு கிடையாது.

காலையில் விடியுமுன்னரே எழுந்து வீட்டு முற்றம் கூட்டி, சாணித் தண்ணீர் தெளித்து, பால் கறந்து அதன் பின்னர் குளித்துவிட்டு நெற்றி நிறைய விபூதியும், அகலப் பொட்டும் வைத்துக்கொண்டுதான் வீட்டுக் காரியங்களைத் தொடங்குவாள்.

---



ஒருத்தர்: சந்திரனை ஆராய்ச்சி பண்ண ஒருத்தரை அனுப்பி இருக்கிறேன்... நாளைக்குத் திரும்பி வந்திடுவார்.

மற்றவர்: என்ன சந்திரனை ஆராச்சிபண்ணவா?...ராக்கட்டிலா?

ஒருவர்: சின்னையா மகன் சந்திரனை...என் மகளுக்கு மாப்பிளையாய் எடுப்பதற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலாவுக்கும் ராசாத்திக்கும் ஏணி வைத்தாற்கூட எட்டாது.- -இது மனோகரனின் எண்ணம்.

'ஐஸ் சொக்லட்டைத் தொடர்ந்து தினமும் லீலாவுக்கு ஏதேனும் ஒரு பொருள் வேண்டாமல் செல்ல மாட்டான் அவன். அவனது மாதச் சம்பளத்தில் பெரும் பகுதி இப்படியான செலவுக்குத்தான் சரியாய் இருந்தது.

லீலாவின் ஒயிலான சிரிப்புக்கு மாத்திரம் எதையும் கொடுக்கலாமே!

மயக்கத்தின் பிடியிலிருந்த மனோகரன் இப்படி நினைப்பான்.

வீடென்றால் ராஜரத்தின மாஸ்டரின் வீடு மாதிரி அமைய வேண்டும்! நல்ல அழகான சுற்றுப் புறங்களோடு கூடிய வீடு; படித்த அழகிய, அத்துடன் கலகலப்பாக 'சோஷலாக' பழகும் மனைவி குணம்......

அழகு கொஞ்சும் ஒரே ஒரு மகள் லீலா.........

மனோகரன் ராஜரத்தின மாஸ்டரின் இல்லச்சிறப்பை பற்றி தன்னுள் இப்படி ஓர் மதிப்புரையை எழுதி வைத்திருந்தான் ஆனால் அதிலும் ஓர் கோணலை அவன் வெகு விரைவில் காண நேர்ந்தது.

ராஜரத்தின மாஸ்டர் ஓவியம் கற்பிக்கும் பாடசாலையில் ஓர் ஓவியக் கண்காட்சி.

மனோகரன் அதைப்பார்க்கச் செல்கின்றான்.

அங்கு லீலா அழகுத் தேவதையாய் ஓவியத்துடன் ஓவியமாய்த் தந்தையுடன் நின்றாள்.

முக்கியமான ஒரு குறிப்பை தன் வீட்டில் வைத்து விட்டு மறந்து போய் வந்து விட்டபடியால் மனோகரனை அங்கு சென்று, தன் மனைவி குணத்திடம் கேட்டு அதை வேண்டி வருமாறு கூற மனோகரனும் மறுக்காமல் அவரின் இல்லம் சென்றான். அங்கு...

அவன் சதா வெறுக்கும் ஜெயசீலன்...... சிவந்த விழிகளுடன்......

அவனருகே மாஸ்டரின் மனைவி குணம்......!


அவர்கள் இருந்த நிலையோ......!

மனோகரனின் முகம் அட்டகோணமாகியது.

ராஜரத்தின மாஸ்டர் விரக்தியுடன் சதா பேசுவதும், அவரின் கவலை தோய்ந்த முகமும் அவனுக்கு நினைவுக்கு வந்தது.

''பாவம் மாஸ்டர்!''

அவன் வெறுப்புடன் முணுமுணுத்தபடியே நகர்ந்தான் இது நடந்து இரண்டு மாதங்களாகி விட்டது. மனோகரன் இச் சம்பவத்தை மறந்து விட முயன்றும், ஜெயசீலனும் குணமும் அவனது



ஒருவர்: எனக்கு ''மினிஸ்டர்''களை நன்றாகப் பிடிக்கும்.

மற்றவர்; நாட்டுக்குத் தொண்டு செய்பவர்களைப் பிடிக்கத் தானே வேணும்.

ஒருவர்; இல்லை...... மினிஸ்டரில் மினி இருப்பதால்.

சிந்தையில் இடைக்கிடை தோன்றினார்கள்.

மாஸ்டருக்காக அவன் பரிதாபப்பட்டான்.

ஆனால் லீலாவை எண்ணியதும் இவை எல்லாவற்றையும் மறந்து விட்டான்.

லீலாவைக் காண தினமும் சென்று வந்தான், எப்படியாவது ஒழுங்கு பண்ணி வருகிற தை மாதத்தில் அவளைத் திருமணம் செய்தல் வேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

லீலாவைப்பற்றிய எண்ணம் அவனின் மனதை பயித்தியமாய் ஆட்டி வைத்தது.

''திருமணத்துக்கு என்ன அவசரம் மனோ!

போட்டோ ரெக்ஸ்
10, அப்துல் ஜப்பார் மாவத்தை
கொழும்பு 12
- போன்: 35237-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே இருந்து விட்டு இன்னும் கொஞ்சக்காலம் தள்ளி வைத்தால் என்ன?''

லீலா கொஞ்சலுடன் கேட்பாள்.

ஆனல் அவனே இருக்கை கொள்ளாமல் தவிப்பான். ''என்ன லீலா என்னைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறுயே! அங்கே என் அம்மா, அந்தப் பட்டிக் காட்டுப் பெண்ணை இந்த தை மாதத்தில் என் தலையில் கட்டி வைத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பாள் போல் தெரிகிறது. இங்கே நீயானல் ஆறுதலாகச் செய்யலாம் என்கிருயே!

பிளீஸ்! எனக்காக உன் மனதை மாற்றக் கூடாதா? நீ சரி என்று ஒரு வார்த்தை சொல்! இன்றே உன் அப்பா விடம் யாவற்றையும் கூறி நல்ல முடிவுக்குக் கொண்டு வருவேன்; என்ன? சொல்.....உம்...!''......?

ஆனல் லீலாவோ கலகலப்பாக சிரித்தபடியே அவனது கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டி இப்பேச்சை மாற்றி விடுவாள்.

ஒரு நாளாவது லீலாவோடு வெளியே புறப்பட்டுச் செல்ல வேண்டும். என்று தணியாத எண்ணம் ஒன்று மனேகரனின் மனதில் தோன்றி விட்டது. லீலா விடம் கூறினன்.

முதலில் அவள் மறுத்து விட்டாள், எவ்வளவோ கெஞ்சல்களுக்குப் பின் அரை குறையாய் தலையை ஆட்டினுள், இன்று மாலை கடற்கரைக்கு அவளை அழைத்துப் போவதென்று அவன் தீர்மானித்து, காலை படுக்கையிலிருந்து எழும்பியது முதல், மாலைப் பொழுதை மனேகரமாக அவளோடு கழிக்க பல திட்டங்கள் போட்டான்.

மாலை நாலு மணிக்கு முகத்தை மழுமழுவென்று 'சேவ்' செய்து கிரீம் போட்டு தலை வாரி சலவை செய்து மடிப்புக் குலையாத ஆடைகளை அணிந்து கொண்டான். கண்ணுடியில் தன் முகத்தை ஆயிரம் தரம் பார்த்துக் கொண்டான். அவனின் அழகைப் பார்க்க அவனுக்கே 'பெருமை' யாகக் கூட இருந்தது.

லீலாவுக்காக கடையில் உயர்ந்த விலை சொக்லட் பெட்டி இரண்டு வேண்டிக் கொண்டு மாஸ்டரின் வீட்டுக்குக் புறப்பட்டான்.

பலாலி வீதியும், யாழ்ப்பாணம் பிரதான வீதியும் இணையும் சந்தியில் அவன் திரும்பிய போது வேகமாக வந்த கார் ஒன்றுக்கு அவன் வீதியின் ஓரமாக ஒதுங்கி வழி விட்டான்.

கலகலவென்று ஒரு பெண்ணின் சிரிப் பொன்று கேட்டு, காரை உற்று நோக்கினன்.

அங்கு............

அவனின் தலையில் யாரோ ஒரு கூடை நெருப்பை அள்ளிக் கொட்டி விட்டாற் போலிருந்தது. திரும்பவும் பார்த்தான்.

அவனைக் கடந்து செல்லும் அந்தச் சிவப்புக் காரில் அதனை ஓட்டிச் செல்லும் ஜெயசீலனுடன் மனேகரனின் சிந்தை கவர்ந்த லீலா ஜெயசீலனுடன் நெருங்கி அமர்ந்திருந்தாள்.

வண்டியிலிருந்த லீலா பின் பக்கம் திரும்பிப் பார்த்து தன் கையையும் ஒயிலாக அசைத்தாள். தலை கிறு கிறுக்க, அக் காரையே பார்த்துக் கொண்டு நின்ருன், மனேகரன் ஆனல் அச் சிவப்பு மோட்டார் கார், கடற்கரையை நோக்கிச் செல்லும் பாதையில் சென்று மறைந்தே விட்டது. அக்கார் சென்ற வேகத்தால் எழும்பிய தூசி அவனின் கண்களை அடைத்து விழிகளை உறுத்தியது. விழிகளை மட்டுமா உறுத்தியது......?



போஸ்ட் மாஸ்டர்: பேச்சு சுதந்திரத்தை நம்ம ஆட்கள் தப்பாகப் புரிந்து கொண்டாங்க.
மற்றவர்: என்னங்க அப்பிடிச் சொல்றீங்க.
போஸ்ட் மாஸ்டர்: நம்ம ஆட்கள் டெலிபோனை பேச எடுத்தால் மணித்தியாலக் கணக்கில் பேசித் தள்ளுருங்க.

அவனது கால்கள் அவனையறியாமல் பிரதான வீதி வழியே சென்று பூங்காவை அடைந்தன.

''எல்லாமே வேஷங்கள்!

மோசக்காரி......... ஏமாற்றி விட்டாளே! இவளுக்காக எவ்வளவு பணத்தை வாரி இறைதேன்? வெறுப்புடன் முணு முணுத்தான்.

ஏனே தெரியாது முல்லைக் குளம் கிராமத்தில் இருக்கும் தன் மாமன் மகள் ராசாத்தியின் முகம் அவனது சிந்தையில் உதித்தது. வழக்கமாக அந்த முகத்தை நினைக்கவே அருவருக்கும்! ஆனல் மிக மிக இனித்தது!

''என்ன இருந்தாலும் கிராமப் பெண், கிராமப் பெண் தான்......!'' மன நிறைவோடு சொல்லிக் கொண்ட மனேகரனுக்கு மாமன்மகள் ராசாத்தியின் நெற்றி நிறைய வீபூதி பூசி அகலப் பொட்டிட்ட முகம், லீலாவின் அழகு முகத்தைக் காட்டிலும் பல கோடி முறை உயர்ந்ததாகப்பட்டது.

''இந்தத் தை மாதம் கல்யாணத்தை வைக்கும் படி அம்மாவுக்கு எழுத வேண்டும்!''

அவன் எழுந்து நடந்தான்.

லீலாவுக்காக அவன் வேண்டி வந்த விலை உயர்ந்த சொக்லட் பெட்டிகள் கேட்பாரற்று அவன் அமர்ந்திருந்த பெஞ்சில் கிடந்தன.!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லயத்துல கேட்டேனுங்க

--பதுளை ஆர். கே. கோபாலன்.

ஓய் மருதை! இந்த தடவை கோயில் நிதிக்கு நம்ப கச்சிகாரங்களை எல்லாம் ஒத்த சதம் சரி குடுக்க வேணும்ன்னு சொல்லி வச்சு இருக்கேன். இது நம்ப கச்சி பிரிதிநிதியே ஆடரு குடுத்திட்டாரு. அது மட்டுமல்ல ரதம் நம்பலயத்து பக்கம் வர விடாம தடுக்கவுஞ் சொல்லிட்டாரு. அப்படி மீறி ரதத்தை கொண்டாந்தா நம்ப கட்சி காரங்க எல்லாம் ஒன்று சேர்ந்து கல்லடி பொல்லடி நடத்தவும் சொல்லிட்டாரு. போலீசு கோட்டு கீட்டு எல்லாம் அவரே கவனிச்சிடுறதாக சொல்லிப்புட்டாரு, அப்பொறம் என்ன நமக்கு பயம்? ஓய் பழனி! நம்ப பிரதிநிதி சொல்றது ஞாயமாத்தான் தெரியுது. ஆனா ரதம் லயத்துக்கு வர்ரதை தடை பன்றது துன்னா கஷ்ட்டம். ஏன்னா அம்ப பெரியதொரை தலைமையிலதான் ரதம் ஊர்வலம் வர்தாம், பெரிய தொரை வார்ரபோ நமக்கு ஒன்னும் செய்ய முடியாதே.

டேய் மருதை! நீசுத்த பயந்தாங்கொளியா இருக்கிறியே. இந்த பெரிய தொரை டூட்டி நேரத்தில தான் பெரியதொரை. இது நம்ப கோயில் விசயம். நம்ப தமிழ் கோயில்ல என்னத்துக்கு வெள்ளகாரனுக்கு வேலைன்னு நம்ப பிரதிநிதி கோட்டுல வச்சு பிச்சு புடுவாறு பிச்சு. ஒனக்கு தெரியுமா சட்ட கேள்வியில நம்ப பிரதிநிதி கெப்புட்டேன்னு அதுனால நாம ஒன்னுக்குமே பயப்படாம நம்ப கட்சி காரங்க எல்லாம் ஒன்னு சேர்ந்து அடுத்த கட்சி காரங்க விட்டு ஆடி பூசையை செய்யவிடாம கொழப்பம் செய்வோம். கொழப்பம் பண்ண டவுனுல இருந்து கூட ஆளுக அனுப்புறதாக பிரதிநிதி கூட சொன்னாரு.

(அடுப்பூதிக் கொண்டிருந்த மனைவி) ஒப்புராளே! இந்த அநிநாயத்த யாரிடம் போய் சொல்ல இது அந்த ஆண்டவனுக்கே அடுக்குமா? இந்த மாதிரி அக்கிரமம் செய்யுறதால தான் நம்மா தமிழாதிக கயிட்டப்பட்டு, கடைசியில பசு ஸ்டாண்டுல போய் பிச்சை எடுக்கிற நெலைக்கு வந்துர்ராக. இப்படி கீழ் தரமா போறதால தான் நம்பல யாருமே கணக்கு எடுக்காம அநாதையா அம்போன்னு அனுப்புறாக. இந்த அநிநாயத்த ஈந்தியாவில போய் வச்சுக்கிருகிக. பொறவு அங்கயும் நம்ம கண்டிசீமை சனங்களை ரொம்ப எழக்கமா நெனச்சுடுவாக. அக்கரசீமையில இருந்து வந்த வெள்ளக்கார தொரையே நம்ப திருவிழாவுக்கு ஓதவி செய்ய நெனக்கையில யாரோ ஒரு பிரதிநிதி சொன்னாம். இவுக அவுக பேச்ச கேட்கினு நட்டுக்கு நின்று ஆடுரீக. இது தானா நம்ப சமயத்துக்கு செய்யுற ஓதவியா? கோயில கொழப்பத்தை செய்ய, தோட்டத்தில அட்ட காசம் செய்ய நீயெல்லாம் பெரிய காப்பிரி நாட்டு வீரர்ன்னு நெனப்போ, இப்படி நடக்கிறதால நம்ப சாதிக்கும், நம்ப சமயத்துக்கும் தான் கேவலம்.

ஊரு ரெண்டு பட்டா கூத்தாடிக்கு தான் கொண்டாட்டம். ஊழி இருக்கிற நெலயில, நமக்கு கெடச்சு இருக்கிற சுதந்திரத்ல, நமக்கு குடுத்திருக்க மதிப்பில இந்த மாதிரி அக்கிரமத்துக்கு கொறச்சலில்ல. ஊரோடு ஒத்து உருபடுற காரியமா செஞ்சு விட்டு போவியா அத விட்டு புட்டு கொழப்பம் பண்ணுருகலாம் கொழப்பம்.

---




மகிழ்ச்சியில் விளையும் சிரிப்பு சாதாரண சிரிப்பு. கோபத்துக்கு எதிராக, துன்பத்துக்கு முன்னாக நிற்கும் சிரிப்பு மனப்பக் குவத்தில் மலர்ந்த சிரிப்பு.

புத்திக் கூர்மை கூர்மையான கருவி போன்றது. கூர்மையான கருவிகளில் தையல் ஊசி ஒன்று தான் இணைக்க உதவுவது. புத்தி சாலிகளில் தையல் ஊசி போன்றவர்கள் ஒரு சிலரைத்தான் காணமுடியும்.

உள்ளத்தில் உண்மையும், செய்கையில் நேர்மையும் எந்த அளவுக்கு ஒருவனிடம் உண்டோ அந்த அளவுக்குத் தான் அவன் உயர்ந்தவன்.

அறிவு ஆயிரம் கூறும். உணர்ச்சி ஒன்றையே கூறும்.

தலையைத் தாழ்த்திப் படித்த படிப்பெல்லாம் தலை நிமிர்ந்து வாழ உதவவேண்டும்.

———நல்வழி

தொகுப்பு—'ராகலை ராஜேஸ்'

---

மனைவி: என்ன இந்த வீட்டுக்கு வந்த நாள் தொடக்கம் ''வந்த நாள் முதல் இந்த நாள் வரை வானம் மாற வில்லை'' யென்ற பாட்டையே பாடுறீங்க.

கணவன்: வீட்டு ஒழுக்கை வீட்டுச் சொந்தக்காரன் திருத்தித்தாருனில்லையே,

---

டாக்டர்: என்ன கட்டில் மேல் படுக்காமல் கீளே படுத்திருக்கிறுய்.

நோயாளி: நான் கார் மெக்கானிக் சார்............ கீழுக்குத் தான் படுத்துப் பழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரச்சினைக் கடிதம்**

# மை வெளிச்சம்

(ஹாலி-எல
சிவசுப்பிரமணியம்)

எங்களில் படித்தவர்கள் அதிகம் இல்லை. எங்களில் பல்கலைக் கழகத்தைக் கடந்து வந்தவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே. எங்களுக்கு நாகரிகம்தெரியாது. நாங்கள் மலைநாட்டவர்கள். ஈழத்தின் பொருளாதாரமே எங்கள் வலுவுள்ள கரத்தில் தான் தங்கிக் கொண்டிருதாலும் கூட நாம் வயிறு நிறம்ப சாப்பிடும் நாட்கள்ஒரு சில தான்.

உழைப்பையெல்லாம் உரமாக சிந்தி, வியர்வையை நீராகக் கொட்டி, உழைத்து உழைத்து நாம் உருகுலைந்து இந்த மலை நாட்டை பொன் விளையும் பூமியாக்கினாலும் கூட எமது வருமானம் உண்பதற்கோ, எங்கள் குழந்தைகளுக்கு கல்வி புகட்டுவதற்கோ போதுமானதாக இருப்பதில்லை. ஈழத்தின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான நாங்கள், எங்கள் குடும்ப பொருளாதாரத்தால் தலைகுப்புர விழுந்து, உயிரும் உடலும் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து விடாமல் ஒட்டிக் கொண்டிருப்பதற்கு மட்டுமே வருமானம் கொண்டவர்களாக இருக்கின்றோம்.

இந்த நிலையில் வாழும் எங்களின் வாழ்வும் வாழ்க்கையும் போராட்டமாக இருப்பது ஆச்சரியப்படத்தக்க விடயமில்லை. வாழ்க்கை போராட்டத்திலே தவித்துக் கொண்டிருக்கும் நாங்கள் திடீரென்று எங்கிருந்தோ வந்து காரில் இறங்கும் சிலகோட், லோங்ஸ், டையுடன் கூடிய படித்த நாகரிகம் வாய்ந்த பெரிய மனிதர்களைக் காணும் போது வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு தானிருப்போம். ''நாங்கள் சினிமா படம் எடுக்கப் போகிறோம். நடிகர்களையும் நடிகைகளையும் மலை நாட்டில் இருந்து தான் தேர்ந்தெடுக்கப் போகிறோம்'' என்று இவர்கள் கூறும் போது அதை நம்பாமல் இருக்க எம்மால் முடிவதில்லை. நடிப்புலகில் நுழைந்து விடவேண்டும் என்ற மலையக இளைஞர்களின் தணியாத ஆசையை: பலவீனத்தை சாதகமாக்கிக் கொண்டு இந்த பெரிய மனிதர்கள் கூட்டம் அவர்களிடம் முன்பணமாக ஒரு தொகையை பெற்றுவிடு மட்டும் ஒய்வதில்லை. எத்தனையோ மலையக இளைஞர்கள் எப்படியெப்படியெல்லாமோ எதிர் நீச்சலிட்டு வீட்டில் இருக்கும் பாத்திரங்களை விற்றும் கூட இந்த பெரிய மனிதர்களிடம் நடிக்க முன் பணம் கட்டியிருக்கிறார்கள். மலையக மங்கையர்கள் நடிப்புலகில் நுழைந்து விடவேண்டுமே என்ற ஆவலில்; பெரிய மனிதர்களின் பசப்பு மொழிகளினால் மயங்கி கண்ணாக காத்து வரும் பண்பையே பாழாக்கி விடுகிறார்கள். திடீரென்று வந்ததையெல்லாம் வரவில் வைத்துக் கொண்டு மாயமாக மறைந்து விடும் இந்த பெரிய மனிதர்களை திரும்ப காணவே முடியாது.

நாடக விழா வைக்கப் போவதாகக் கூறி நிதி திரட்டி ஏப்பம் விடும் ஒரு சிலர், கலை விழா வைக்கப் போவதாக காணிக்கை கேட்டு உண்டியலோடு மறைந்து விடும் மறு சிலர், சகாய நிதி சேர்ப்பதாக கூறி லிஸ்டோடு திரியும் ஒரு சிலர். அப்பப்பா...! எந்தெந்த விதமாக மலையக மக்களிடம் சுரண்டி விட்டு கம்பி நீட்ட முடியுமோ அப்படி அப்படியெல்லாம் சுரண்டி விடும் இந்த பெரிய மனிதர்கள் சாதாரணமானவர்கள் அல்ல! படித்தவர்கள், நாகரிகமாக உடை அணிந்திருப்பவர்கள், சரளமாக ஆங்கிலம் கதைப்பவர்கள்!

இழப்பதற்கு பிறந்தவர்கள் நாங்கள் அன்று முதல் இன்று வரை நாங்கள் இழந்து கொண்டு தானிருக்கிறோம். அதற்காக நாம் இப்படியும் இழக்க வேண்டுமா? இறைவா...இறைவா...... இறைவா.!

---

ஒருவர்- உனக்கு ஏழைச் சொந்தக்காரர்கள் யாரும் இருக்கிறார்களா.

மற்றவர்- எனக்குத் தெரிந்தவர்கள் ஒருவரும் இல்லை.

ஒருவர்- யாரும் பணக்காரச் சொந்தக்காரர் இருக்கிறாளா.

மற்றவர்- என்னைத் தெரிந்தவர்கள் ஒருவரும் இல்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்றவர்களுக்கு மட்டும்!

(கரஸ்)

இது வேலையற்றவர்களுக்கு மட்டும் பிரத்தியேகமாகத் தயாரித்த பத்திரம் வேலையற்றோர் விடயமாக பத்திரிகைச் செய்திகள் முதலியனவற்றை நீங்கள் படித்திருப்பீர்கள். ஆனால் அதன் உள் அர்த்தங்கள் உங்களுக்கு புரிந்திருக்குமா? நிட்சயம் புரிந்திருக்க மாட்டீர்கள். கீழே படியுங்கள் புரியும்.

விண்ணப்பதாரர் குறைந்தது பத்து வருட அனுபவமேனும் பெற்றித்தல் வேண்டும்:-

ஏற்கனவே ஆளை எடுத்து விட்டோம் வீணாகச் சிரமப்படாதீர்கள்.

விண்ணப்பதாரர் குறிப்பிட்ட திகதியில் இருபத்தியொரு வயது ஒரு மாதத்திற்கு மேற்பட்டிருந்தல் வேண்டும்:-

மனேஜரின் மைத்துனருக்கு அத் திகதியில் இருபத்தியொரு வயது இரண்டு மாதம்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் ரூபா மூவாயிரம் ரொக்கப் பிணை கட்ட வேண்டும்:-

உங்கள் பிணையில் தான் எங்கள் கம்பனிக்கு முதல் போட வேண்டியுள்ளது.

நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைத்தல் வேண்டும் (மூலப் பிரதிகள் அல்ல):-

உவற்றையெல்லாம் பார்ப்பதற்கு எங்களுக்கு நேரமேது அப்படியே தூக்கி 'பாஸ் கெற்' றுக்குள் போடுவதுதானே.

விண்ணப் பதாரியின் தந்தை பெயர்?, பாட்டன் பெயர்?, கொப்பாட்டன் பெயர்?:-

இந்த ஸ்தாபனத்தின் டைரக்டர் ஒரு பழைய வைதீகி தமக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு பழைய பெயர் ஒன்று வைக்க ஆசைப்பட்டு, பெயர் செலக்ஸன் பண்ணப் போகிறார்.

விண்ணப் பதாரருக்கு கண் பார்வை சாதாரணமானதா?:-


ஆபீஸ் மணிக் கூட்டில் மூன்று மணி காட்டும் பொழுது ஐந்து மணியென்று நினைத்து வீட்டிற்கு பயணம் கட்டாமலிருப்பதற்காக. (அவர்தான் சீக்கிரமாக கிளம்பி விட்டாரேயென்று அவரை தடுத்து நிறுத்த அங்கே 'சீவ்' இருக்கப் போகிறாரா அவர் பதினொரு மணிக்கே போயிருப்பாரே).

திறமைக்கே முதலிடம் கொடுக்கப்படும்:-

கல்வியில் அல்ல காக்கா பிடிப்பதில்.

தொழில் நுட்பக் கல்வி ஏதாவது இருப்பின்?:-

அவசியமில்லை. சும்மா சம்பிருதாயத்திற்காக கேட்டு வைத்தோம்.



ஒருவர்:- கங்காரு வயிற்றில் உள்ள பையில் குட்டியைத் தூக்கித் திரியும் உவர் என்ன முதுகில் ',பை'' வைத்து குட்டியை தூக்கி திரிகிறார்.

மற்றவர்:- உவர் ''சார்ட்டட் பிளேனில்'' வந்தவர், தான் இருந்த நாட்டு நாகரீகத்தை இங்கை காட்டுகிறார் போலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சாதாரண எழுத்தாளன் இறந்து விட்டான்... உயிரோடு இருக்கும்போது சாதாரணமாக கருதப்பட்ட அந்த எழுத்தாளன், இறந்த பிறகு....

அவன் ஆத்மா சாந்தியடைய, அவன் மறைவுக்கு அஞ்சலி செலுத்த...... எங்கு பார்த்தாலும் கூட்டங்கள்.........

இறந்த கலைஞனின் ஆத்மா சாந்தியடைய இருக்கும் கலைஞனொருவன்... கூட்டமொன்றில் பேசுகிறன்............

**இருக்கும் கலைஞன்;-** என் அன்புக்குப் பாத்திரமான நாடக அபிமானிகளே...... இன்று நாம் ஏன் கூடியிருக்கிறேம், நம்மோடு கண்ணேடு கண்ணுக இருந்து, இன்று நம்மையெல்லாம் விட்டு மண்ணேடு மண்ணுக மறைந்து விட்ட மாதவன் அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக... அன்பர்களேஉங்களுக்கு என்னைப்பற்றித் தெரியும், முன்னணி நடிக்கர்களுள் நானும் ஒருவன்... அன்பர்களே, உங்களுக்குத் தெரியும். நான் கடைசியாக நடித்த பெண் என்ருல் பெண், ஆண் என்ருல் ஆண் என்ற நாடகத்தில் நான்ஏற்றகதாநாயகன் பாத்திரத்தை எவ்வளவு அருமையாக நடித்தேனென்பது... இன்று என்னை விட கதாநாயகனுகநடிக்கக்கூடிய திறமை வேறு யாரிடமுமே யில்லையென்பது மறுக்கவோ மறக்கவோ முடியாத மாபெரும் உண்மை......அன்பர்களே, இப்போது நாம் ஏன் கூடியிருக்கிறேம் மறைந்த கலைஞன் மாதவனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக, அன்பர்களே, என்னை, என் நடிப்பை பிரபல ஆங்கில நடிகர் ஒருவரின் நடிப்போடு ஒத்துப் பேசுகிறுர்கள், அப்படி பேசுபவர்களுக்கு நிச்சயம் நான் முடிந்த அளவு கைமாறு செய்வேன்... அன்பர்களே இந்த நல்ல நேரத்தில் நான் இன்னெரு நல்ல விஷயத்தையும் கூற ஆசைப்படுகிறேன், அதாவது-எனக்கிருக்கும் அதிசய அழகிற்கும், அற்புத நடிப்பிற்கும், என் சொந்த ஊரில், உறவினர்கள் அனைவரும் சேர்ந்து எனக்கு பொன்னுடை போற்றி பட்டமொன்றும் கொடுக்கப் போகிறுர்கள், அன்பர்களே...... இப்போது நாம் ஏன் கூடியிருக்கிறேம் மறைந்த கலைஞர் மாதவனுக்கு அசஞ்லி செலுத்துவதற்கு.........ஆமாம் அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்துக் கொண்டு, உங்களிடமிருந்து விடைபெறு முன்...... நாளை நான் இரட்டை வேடமேற்று நடிக்கு பூகம்பம் நாடகத்திற்கு வருகை தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் வணக்கம்....



★

நடிப்பதில்

மட்டுமல்ல

—பேனுவைப்

பிடிப்பதிலும்

கலகலப்புத்தான்

★

# ராம்தாஸ் ரஸகுல்லா

இருக்கும் கலைஞன் பேசி முடிந்த பிறகு கூட்டத்திற்கு தலைமை வகித்த பிரமுகர் சொன்னுர்:-

அன்பர்களே செத்துப்போன பிரபல கலைஞன், எழுத்தாளன், மாதவன் அவர்களைப் பற்றி பிரபல கலைஞரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான நடிகர் பேசக்கேட்டீர்கள்......

★

சித்திரகுப்தன்: நீ ஒரு கீழ்ஜாதிப் பெண்ணை மணந்திருக்கிறாய்...... அதனால் உன்னை நரகத்திற்குத்தான் அனுப்பப் போகிறேன்......

மனிதன்: (சிரிக்கிறான்)

சித்தி; ஏன் சிரித்தாய் மானிடனே......

மனி: கேட்பதற்கு மன்னிக்க வேண்டும்...... மகாத்மா காந்தி எங்கிருக்கிறார்......

சித்தி: மனித குலத்தின் மாணிக்கமாக விளங்கிய அந்த மகானுபவன்...... சொர்கத்தில் தான் இருக்கிறார்......

மனி: (சிரிக்கிறான்)

**சித்தி: மீண்டும் ஏன் சிரித்தாய்...**

மனி: இல்லை, கலப்புத்திருமணம் ஒன்றினால் தான் ஜாதிப் பிரச்சினையை தீர்க்கலாமென்று சொன்னவர் சொர்கத்திலிருக்க, அதைக் கடைப் பிடித்த எங்களை நரகத்திற்கு அனுப்புகிறீர்களே............

★

இப்பொழுதுள்ள தமிழ்ப் படத்தயாரிப்பாளர்கள் தங்கள் படங்களில் நடிக்கும் கதாநாயகிகள் குழந்தையுள்ளம் கொண்டவர்கள் என்பதை பாடல் மூலமோ, பேச்சு மூலமோ காட்டுவதில்லை... பின் எப்படி ரசிகர்கள் அந்தக் கதாநாயகி குழந்தையுள்ளம் கொண்டவள் என்பதைப் புரிந்து கொள்கிறார்கள்......

தயாரிப்பாளர்: தன் எட்டு வயதுக்குழந்தைக்கு தைத்த உடையையே அக் கதாநாயகிக்கு அணிவிப்பதால் அவள் குழந்தையுள்ளம் கொண்டவளாகத்தானே இருக்க முடியும்......

★

சாத்திரியார்: உங்க கணவருக்கு புதன் இடபத்திலே இருக்கான் வியாழன் நேர் எதிரா துலாத்திலே இருக்கான்...

மனைவி: அது சரி... சனி எந்தப் பக்கம் இருக்கின்னு சொல்லலே......

கணவன்: என் வலப் பக்கம் தானே நீ இருக்கே... அப்புறம் என்ன அவருகிட்டை கேட்டுகிட்டு...

★

இராசன்: என்ன மச்சான் பிள்ளையளெல்லாத்தையும் கூட்டிக் கொண்டு வெளிக்கிட்டுட்டாய்...

சங்கர்: டாக்டர்கிட்டை கூட்டிட்டு போறேன்...

இராசன்: ஐந்து பிள்ளையளையுமோ...

சங்: மூத்தவனுக்கு பல்லுவலி, இரண்டாவது பையனுக்கு, காதுக்குத்து, மூணாவதுக்கு சளிச்சுரம், நாலாவதுக்கு, வாயு சேட்டை, ஐந்தாவதுக்கு ஒண்ணுமில்லே, அது தான் டாக்டர்கிட்டை கூட்டிகிட்டுப் போறேன்.

இராசன்: முதல் நாலுக்கும் வருத்தம்... சரி... கடைசிப் பிள்ளைக்கு ஒன்றுமில்லையென்னுறாய்...... பேந்தேன் அவனையும் டாக்குத்தரிட்டை கூட்டிக் கொண்டு போறாய்......

சங்: அவனுக்கு ஏன் வருத்தம் ஒண்ணும் வாறதில்லையெண்டு கேட்கக் கூட்டிக் கொண்டு போறன்......

★

நாகரீக மனைவி; இன்னிக்கு நைட் எங்கூட டின்னர் டான்சுக்கு வரப்போறீங்களா?... இல்லையா?... எல்லாரும் அவங்க அவங்க ஹஸ்பென்டோடதான் வர்றாங்க...

கணவன்: ஓ... வரும்போது அவங்க ஹஸ்பென்டோட வந்தாலும், டான்ஸ் ஆடும் போது மத்தவங்க ஹஸ்பென்டோட தானே ஆடுவாங்க......... அதுக்குப் பேரு... சோஷல் மூவ்மன்ட்சீ......

★

கொழும்பு-7ல் வசிக்கும் ஒருத்தியைப் பார்த்து கொழும்பு 3-ல் வசிக்கும் ஒருத்தி கேட்டாள்......

கொ: 3:- ஏண்டி நீ எப்பிடீ டீ கல்யாணம் பண்ணிகிட்டே.

கொ: 7:- அது பெரிய ஸ்டோரி டீ... என் டடீ எனக்கு ஒரு போயைப பார்த்தாரு, அவனையும் எனக்கு பிடிச்சிது, எங்க மமீ எனக்கொரு போயைப் பார்த்தா, அவனையும் எனக்கு பிடிச்சிது, நான் ஒரு போயை பார்த்தேன் அவனையும் எனக்குப் பிடிச்சிது...

கொ: 3: இந்த மூணு பேரிலே நீ யாரைடீ-மெறிபண்ணினே-

கொ: 7:- எங்க அகாவுக்கு பேசின போயைத் தான்...

கொ: 3: ? ? ? ?

★

மனைவி: ஏங்க இப்படியெல்லாம் கோவிச்சுக்கிறீங்க... நான் உங்களுக்கு என்ன தொந்தரவு கொடுத்திருக்கேன்... தெரிஞ்சவங்கிட்ட சொல்லி விமலா வாங்கிகிட்ட மாதிரி 250 ரூபாயிலே ஒரு காஞ்சீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரம் வாங்கிக் கொடுக்கச் சொன்னேன் இது தொல்லையா?... விமலா செய்து கிட்ட மாதிரி 5 பவுனிலே ஒரு நெக்லஸ் கேட்டேன் இது தொல்லையா?... விமலா செய்திட்ட மாதிரி ஒரு வைரத்தோடு கேட்டேன் இது தொல்லையா?...

கணவன்: நல்ல காலம் விமலா செய்துகிட்ட மாதிரி ஒரு புருஷனைக் கேட்காமப் போனியே...... அதுவே போதும்...

மனைவி: ஏங்க இதெல்லாம் என் நன்மைக்காகவா கேட்கிறேன், நாளைக்கு ஒருத்தி நான் வெறும் வொயில் சாறி கட்டிகிட்டிருக்கிறதைப் பார்த்தா, முத்துலெட்சுமி வொயில் சாறி கட்டிகிட்டு இருக்கான்னு சொல்லமாட்டா, சாம்பசிவத்தோட மனைவி வொயில் சாறி கட்டிகிட்டிருக்காளேன்னு சொல்லுவாளே, அனுவசியமா உங்க பெயர் அங்க அடிபடுமேன்னு தான் யோசிக்கிறேன்...

கணவன்: ஆகா கணவன் மேலே என்ன கருணை... அடியேய் முத்துலெட்சுமி...கண்படடி சாமான்கள் வாங்கி... கடங்காரங்களாப் போனு .. நீ சொன்ன மாதிரி...... அந்த ஒருத்தி ''சாம்பசிவம் கடங்காரனுப் போயிட்டான்னு சொல்லமாட்டா.... முத்துலெட்சுமியோட கணவன் கடங்காரனுப் போயிட்டானேன்னு தான் சொல்லுவா... அதனுலே அநாவசியமா உன் பேர் அங்க அடிபடுமேன்னு யோசிச்சுத் தான, ஒண்ணுமே வாங்கித் தராம இருக்கேன்...

★

மகன்: அப்பா உங்களாலே என் மானமே போச்சு...


அப்பா: என்னலையா...

மகன்: பின்ன என்னப்பா...... அண்ணிக்கு நீங்க, இந்த உலகத்திலே எதுவுமே நிலையானதில்லேன்னு சொன்னீங்களா இல்லையா?...

அப்பா: இப்பவும் தான் சொல்லுறேன், எதுவுமே நிலையானதில்லே...

மகன்: பள்ளிக்கூடத்திலே மாஸ்டர் கேட்டாரு... சிங்கப்பூர் எங்க இருக்குன்னு...உடனே யோசிச்சேன்...... நீங்க சொன்ன சொல் அதுதான். நிலையானதில்லே ஞாபகத்திற்கு வந்திச்சு...... ''சார்... போன வருஷம் நான் பூமிசாத்திரம் படிக்கும் போது சிங்கப்பூர் மலேயாவிற்கு மேலேயிருந்துச்சு ஆனு இப்ப எங்க இருக்கின்னு தெரியாதின்னேன்... என் கன்னம் வீங்கியிருந்திச்சே அண்ணிக்குத் தான் இது நடந்திச்சு......

---



சாஸ்திரியார்; தம்பி என்ன நட்சத்திரம்?

குமார்: திருவோணம்.

சாஸ்திரியார்: திருவோணத்தில் பிறந்தவர்கள் ஒரு கோணத்தை ஆழவேணுமே?

குமார்: ஒ......... யாழ்தேவியில் ''கோணர்'' சீற் கிடைக்கிற பலனிருக்கு.

—ஜோக்கிரடீஸ்

ரதி- எங்கப்பா எப்படி தான் சி. ஐ. டி. வேலே பார்க்கிரு ரோ எனக்கு தெரியாது.

விமலா- ஏன்?

ரதி- நான் இப்போ எவ்வளவு காலமாக என் காதலருக்கு காதல் தடிதம் எழுதுறனே அதை இன்னும் கண்டு பிடிக்கலேயே?

—ஜோக்கிறரீஸ்

---

பொலிஸ்: எங்கு அவசரமாக ஓடுகிறுய்?

பெண்: ஒரு பார்ட்டிக்குப் போகிறேன். நான் போட்டிருக்கும் கொண்டை தான் இப்போ நாகரீகம். இந்த நாகரீகம் மாற முந்திப் போயிட வேணும்.

—மொகிதீன் கான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### கருடன் ''வெல்டன்''

கருடன் இந்த பாரை பவனி வரும்போது அதன் பார்வை மிகவும் துல்லியமாக இருக்கின்றது. மின்சார வேகத்தில் மாறிக் கொண்டு இருக்கும் இந்த பாரில் அதைவிட வேகமாக கருடன் பறந்து சென்று பார்த்து வந்ததை சிரித்திரன் வாசகர்களுக்கு விருந்தாக தருகிறர்.

தெமட்டகொடை கொழும்பு-9. —எஸ். எம். ஜமால்

### வேல் வேல்! வெற்றி வேல்!

சிரித்திரனில் வெளியாகிய ''குவளையின் எழிலும் வேலின் கொடுமையும்'' என்ற பகுதிக்கு ரேகாவாக பங்கு பற்றிய மூவரும் பிரமாதமாக பதில் எழுதி ஆண்களை தோற்கடித்து விட்டார்கள். எப்படிப்பார்த்தாலும் பெண்கள் பெண்கள் தான். வாழ்க அவர்கள் திறமை.

செம்மலை அளம்பில் —சி. குலசிங்கம்

### பற்பல கதையும் பலே! பலே!

பகிடியும் எழிலும் பற்பல கதையும்
மகுடியின் பதிலும் மற்றும் நற்கவியும்
நாடியே நிற்கும் நகைப் பெனும் மழையும்
சூடியே வரும்நற் சிரித்திரனே வாழ்க.

1/ஏ, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பணம். —இ. அமிர்தலிங்கம்

### வாழ்க! சிவராசா, வாழ்க செல்வி

''ஆச்சி பயணம் போகிறுள்'' கதை முடிந்து விட்டது. ஆனல் சிவராசாவையும் செல்வியையும் எம்மால் மறக்க முடிய வில்லை. அவர்களின் திருமணத்திற்கு சிரித்திரன் வாசகர்களை மறக்காமல் ''அழைப்பு'' அனுப்புங்கள்,

217, மெயின் வீதி, நீர்கொழும்பு. —திரா. க. பென்னம்பலம்

### திரி புரசுந்தரிகளே சபாஷ்!


திரிபுரம் போல் அமைந்த மூன்று நங்கையர் தமது கற்பனைத்திறனல் ரேகாவாக மாறி ஆண்களை ஒதுக்கித் தள்ளி விட்டார்களே வெட்கம், வெட்கம்.

செம்மலை, அளம்பில் —நா. சோதிலிங்கம்

### மறை முதல்வா என்னே உன் ஞாபக சக்தி

மறை முதல்வனின் ''சிரிப்பு அதைசிர் தூக்கி பார்ப்பதே நமது பொறுப்பு'' என்ற கட்டுரை பிரமாதம், நகைச் சுவை நடிகர் எல்லோரையும் எம் மனக்கண் முன் நிறுத்தி மெய் மறக்க செய்து விட்டார். வாழ்க அவர் ஞாபக சக்தி வளர்க அவர் எழுத்து.

நுவரெலியா. —நா. முத்துலிங்கம்



நடிகன்: மயான காண்டத்தில் நான் இறந்து போன தேவ தாசனுக்கு நடித்தேனே...... எப்படி என் நடிப்பு?

ரசிகன்: சீ...... உயிர்த்துடிப்பில் லாத நடிப்பு!

—சாயிரா.

---

மகன் ஏன் சன்னியாசியாய்ப் போனவன்?

சாதகத்தில் கலியாணப் பல னில்லாதபடியால்.

---

மல்லிகை

கலை
இலக்கிய
மாத
இதழ்

ஆசிரியர்:
டொமினிக் ஜீவா,
60, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பு           படமும் விளக்கமும் 1.

# இராச்சத விலங்கு

படம்: 'ராலி'     விளக்கம்: 'குணா'



195 கோடி ஆண்டுகளுக்கு முன், றையாசிக் என்ற காலத்தில், பூமியில் வாழ்ந்த ஒரு இராச்சத விலங்கு இது வாகும். இதனை டைனோசார் என்பர். (டைனோ — பெரிய — இராச்சத; சார் - விலங்கு - ஊர்வன) இதனுடைய எலும்புக்கூட்டை, பூமியின் கீழ் புதையுண்டு இருந்து, இன்று எடுத்துள்ளனர். அக்காலத்தில் பூமி முழுவதையும் இந்த இராச்சத விலங்கே ஆக்கிரமித்து ஆதிக்கம் செலுத்தியது. பல வகையான டைனோசார்கள் பூமியில் வாழ்ந்துள்ளன. சில மாமிச பட்சிணிகள்; சில தாவர பட்சிணிகள். படத்தில் காணப்படுவது மாமிசபட்சிணி யாகும். இதனுடைய பெயர் ரைரு சோரஸ் என்பதாகும். இந்த இராச்சத விலங்கின் தலைமட்டும் நான்கு அடி நீளமானது; பற்கள் 6 அங்குல நீளமானவை. இது ஏறத்தாழ 120 அடி நீளமானது. இவ்விலங்கின் பின்னங் கால்கள் மிக வலிமையானவை. இதன் முன்னங் கால்கள் மிகவும் சிறியன. பின்னங்கால்களின் துணை கொண்டே, இந்த மாமிசமலை பூமி அதிர நடக்கும். இப் பயங்கர விலங்குகள் ஒன்றோடொன்று சண்டையிட்டபடியே, அளவுக்கு அதிக மாகத் தின்று கொழுத்துத் திரிந்தன. இந்த இராச்சத விலங்கிற்கு மூளை மிகச் சிறிது. இந்த பெரிய பிராணிக்கு ஒரு முயலின் மூளையளவு கூடக் கிடையாது. இன்று இந்த இராச்சதப் பிராணியின் வழிவந்தனவாகவே முதலைகள் விளங்குகின்றன.

---

## வெண்ணிலவு

-'கு. இராமச்சந்திரன்'-

வட்டமான வெண்ணிலவை
வந்துபாரடி — வெள்ளித்
தட்டு போல தகதகத்து
ஜோதி வீசுதே

★

கட்டறுத்து பலூனொன்றைக்
காற்றெடுத்துப் போயீ-மேகக்
கூட்டத்திலே மிதக்கவிட்டு
காலம் காட்டுதோ

★

எட்டி எட்டி உதைத்த பந்து
எழுந்தெழுந்து மேல் - சென்று
ஒட்டி விட்ட தோ எனவே
எண்ணத் தோன்றுதே

★

சுட்டெனக்கு அம்மாதரும்
அப்பம் நடுவில் - உள்ள
வட்டமென் தோன்றுகின்ற
வடிவு பாரடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவையர் விரும்புவது கண் நிறைந்த பதி
படித்தவர் விரும்புவது கண்கவர் பதிப்பு.

உங்கள் அச்சு வேலைகட்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்:

# நியு கணேசன் பிறின்டேர்ஸ்,

22, அப்துல் ஜப்பார் மாவத்தை,
கொழும்பு-12.

---

## வருகிறது புதுவருடம்

## வாருங்கள்

## புடவைகள் வாங்க



தங்க நகைகளும்
வாங்கலாம்



## சிங்காரம்ஸ் டைமா நகை மாளிகை,

47, செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 20875



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி வந்ததடா முருகையா

—கருணையோகன்—



பங்குனி வந்ததடா முருகையா
    பனங்கள்ளுக் காலமடா முருகையா!
எங்கெங்கும் நம்தோழர் முருகையா
    இன்பம்பே ரின்பமடா முருகையா;

பாளையைக் கண்டதுமே முருகையா
    பறக்குமடா துயர்யாவும் முருகையா!
கோழையினி இல்லையடா முருகையா-நாம்
    குதித்தாடும் சிறுவரடா முருகையா!

தினைச்சோறும் கருவாடும் முருகையா
    சேர்த்துண்டால் அமிர்தமடா முருகையா!
வினையெல்லாம் நீங்குமடா முருகையா
    வெற்றிவந்து பற்றுமடா முருகையா!

கொழும்பிலிருந்து வந்ததுமே முருகையா - கள்
    குடிக்க ஓடி வருவரடா முருகையா
எழும்பாது இருப்பரடா முருனகயா - அட!
    ஏழெட்டுப் போத்தலடா முருகையா

அப்பனும் பிள்ளையுமே முருகையா-இங்கு
    அருகருவே பருகிநிற்பர் முருகையா - அவர்
செப்புகின்ற மொழியாவும் முருகையா
    செந்தமிழில் இல்லையடா முருகையா!

கல்லூரி விடுதலையில் முருகையா-,
    கனபோத்தல் போகுமடா முருகையா
சொல்லாதே ஒருவருக்கும் முருகையா - வாத்தி
    சொல்லிச்சில போகுமடா முருகையா!

உயர்சாதி மனிதரெல்லாம் முருகையா
    உறவினராய் விடுவரடா முருகையா
நயந்து நயந்து நிற்பரடா முருகையா - காசு
    நாளையென்று சொல்வரடா முருகையா!

கள்ளருந்தும் போதினிலே முருகையா
    காணவில்லை சாதிபேதம் முருகையா!
எல்லோரும் ஓர்சாதி முருகையா - இது
    என்றென்றும் நிலையாதோ முருகையா!




சிவராத்திரி விழித்திருந்தீர்களா?

ஓ...எனது சிகரட் குடிக்கிற தம்பி லீவில் வந்திருந்தான். இரவு முழுக்க இருமிக்கொண்டிருந்தபடியால் கண்ணோடு கண் மூடவில்லை.

—சாயிரா.

ஒருவர்: நில் கவனி காதலி கல்யாணம் பண்ணுதே யென்றும் ஒரு படம் தாரித்தால் நல்லது.


ஹல்கிறனேயா
"சிரித்திரன்"
வாசக நேயர்கள்
சிரித்திரனை:



எஸ். சுகுமார் புக் டிப்போ,
59, ருகலை பஸாரில்
பெற்றுக்கொள்ளலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்சிரிப்பு**

# நவீன தருமபுத்திரர்

—ஜகத்குரு.

யட்சன்: ஹே! தர்மராஜனே! உலகில் மிக அரியது எது? பெரியது எது? எளியது எது? சிறியது எது?

தரும புத்திரர்: ஹே; யட்ச! மிக அரியது செத்தல் மிளகாய். பெரியது மந்திரிப் பதவி. எளியது பிறருக்கு ஆலோசனை கூறல். சிறியது ஹோட்டல் இடியப்பம்.

யட்சன்: உலகில் மிக நீளமானது யாது? குறுகியது யாது? மிகக்கூடியது யாது? குறைந்தது யாது?

தரும புத்திரர்: நீளமானது பஸ் கியூ. குறுகியது மினிஸ்கேட். மிகக் கூடியது வாழ்க்கைச் செலவு. குறைந்தது சம்பளம்.

யட்சன்: ஒருவனுக்கு உண்மையான உயர்வைத் தருவது யாது? உழவர்க்கு உறுதியளிப்பது யாது? ஆக்கத்தை விரும்புவோர்க்கு இன்றியமையாதது யாது?

தரும புத்திரர்: ஹே! யட்ச! உண்மையான உயர்வைத் தருவது ஞெருக்கற். உழவர்க்கு உறுதியளிப்பது உத்தரவாத விலைக் கொள்வனவுத் திட்டம். ஆக்கத்தை விரும்புவோர்க்கு இன்றியமையாதது காக்கா பிடிக்கும் ஆற்றல்.

யட்சன்: ஹே! தர்ம பூபதியே! உலகில் மிக இனியது யாது? கசப்பானது யாது? எடுக்க எடுக்கக் கூடுவது யாது.

தரும புத்திரர்: மிக இனியது பனங்கள். கசப்பானது வருமான வரி. எடுக்க எடுக்கக் கூடுவது கடன்.


யட்சன்: ஹே! தர்ம ராஜனே! நான் கேட்ட கேள்விகளனைத்திற்கும் தகுந்த விடைகளையீந்தனை. உனது புத்தியை மெச்சினேம். உனக்கு வேண்டும் வரம் ஒன்று கேட்பாயாக.

தரும புத்திரர்: எனது மகனுக்கு நல்ல கல்லூரி ஒன்றில் அட்மிஷன் எடுத்துத் தந்தால் போதும்.

யட்சன்: அவ்வாறே ஈந்தோம். ஆயினும் அது இப்பூவுலகில் நடக்கக் கூடிய காரியமல்ல. மேலுலகத்திற்கு அனுப்பி வைத்தால் அங்கே ஒழுங்கு செய்து தருகிறேன்.

தரும புத்திரர்: ஐயோ! வேண்டவே வேண்டாம். அவன் இப்படியே இருந்து விட்டுப் போகட்டும்.

-சௌ-






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சிறப்பும் ஒருங்கே அமைந்து
ஈழத் திரைவானின் ஒளிவிளக்காக
வெளிவர இருக்கும் திரை ஓவியம்

## குத்து விளக்கு.



# கு த் து வி ள க் கு

- சிறந்த கதை
- சிறந்த டைரக்ஷன்
- சிறந்த கலை அமைப்பு
- சிறந்த ஒலிப்பதிவு
- சிறந்த ஒளிப்பதிவு
- சிறந்த இசை

படப் பிடிப்பு, டைரக்ஷன்:
டபிள்யூ. எஸ். மகேந்திரன்

தயாரிப்பு: வி. எஸ். துரைராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம்: கியூபீ-59/300

ஆள் பாதி ஆடை பாதி என்பார்கள். ஆகவே உங்கள் ஆடைகளை
அழகாகத் தைப்பதற்கு வாங்கும் நூலை நன்கு
ஆராய்ந்து வாங்குங்கள்.




## முயல் மார்க் நூல் தரமானது உரமானது.

வானவில் வர்ணங்களில் வகைவகையான ''முயல் மார்க'' தையல் நூல்களை எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

# சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி,

கொழும்பு-12

101/4, செட் பெனடிக்ஸ் வீதி, கொழும்பு-13-ல் உள்ள சி. சிவஞானசுந்தரம், அவர்களால் 201, டாம் வீதியிலுள்ள குமரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 21388.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org